ஆரம்பம் 1969 பெப்ரவரி

ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

அறிவோம்.. அறிவிப்போம்...

சமய – சமூக – இலக்கிய வெளியீடு



ஜனவரி – 2022






"உயிர் இருக்கும்போது எதையும் கொடுக்காமல், இறந்த பிறகு தர்மங்கள் செய்ய ஏற்பாடு செய்வது வடிகட்டிய சுயநலமாகும்"



50/=







"ஏழையின் முகம் மலரும்போது இறைவனின் உள்ளமும் மலர்ச்சி கொள்கிறது"

# தொண்டன்

**அறிவோம் ... அறிவிப்போம் ...**

ஆரம்பம் – 1969 பெப்ரவரி

மலர் – 53 இதழ் – 02

ஜனவரி – 2022

ஆசிரியர் :

■ அருட்தந்தை. நிகஸ்டன் பீற்றஸ்

துணையாசிரியர் :

■ பெஸ்லியோ வாஸ்

நூல் வடிவமைப்பு :

■ சுபாஜெனி சங்கர்

**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். – 44,
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.






| | |
|---|---|
| இறைவனின் மீட்புத் திட்டத்தில் ................... | 02 |
| பார்வைகள் பலவிதம் ................................ | 04 |
| மாணவர் பக்கம் ........................................ | 05 |
| அன்பியங்களின் ........................................ | 06 |
| இறவா நம்பிக்கைகள் ................................ | 09 |
| ஒரு வெண்மணற் கிராமம் ......................... | 10 |
| தை மகளே வருக .................................... | 13 |
| முயற்சி என்பது தொடர்கதை ...................... | 14 |
| பன்னாட்டு பழமொழிகளில் ......................... | 16 |
| இலக்கிய மஞ்சரி ..................................... | 18 |
| மாறாதோ காலம் ...................................... | 20 |
| கடுகுக் கதை ............................................ | 21 |
| விசித்திரங்கள் ........................................... | 22 |
| நலந்தரும் ஒளியாய் .................................. | 24 |
| திருஅவைச் செய்திகள் .............................. | 23 |
| வினாவிடைப் போட்டி ................................ | 26 |
| போட்டி முடிவுகள் ...................................... | 27 |
| திருவிவிலியம் கற்போம் ............................ | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ–ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com


விலை: : 50/=

ஆண்டுச் சந்தா : 960/=

(தபாற் செலவு உட்பட)

# அன்புடன் உங்களோடு ...

**அன்புமிக்க சகோதரங்களே!**

*அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு
மலர்ந்திருக்கும் இந்த வருடம் புத்துணர்ச்சியும் புதிய நம்பிக்கையும்
எம்மில் வளர உதவட்டும்.*

கடந்த ஆண்டிற்கு நன்றி சொல்லி புத்துணர்ச்சியோடும், புதிய நம்பிக்கையோடும் புதிய ஆண்டிற்குள்ளே காலடி எடுத்து வைத்திருக்கின்றோம். எப்படி ஒரு குழந்தை இம்மண்ணுலகில் பிறக்கின்றபொழுது மகிழ்ச்சியை உண்டாக்கி கடவுளின் அன்பை வெளிப்படுத்துகின்றதோ அதுபோல புதிதாக பிறக்கும் ஒவ்வொரு ஆண்டும் கடவுள் நம்மை எவ்வளவு அன்பு செய்கின்றார் என்பதை வெளிப்படுத்துவதாக உள்ளது. இந்த அன்பை பகிர்ந்து வாழ்வதன் வழியாக அவரது அன்பிற்கு நன்றியுள்ளவர்களாவோம்.

இந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே பலருடைய மனதிலே எழக்கூடிய கேள்வி இந்த ஆண்டும் வைரஸ் தாக்கங்களின் ஆதிக்கத்திலேதான் நாட்கள் நகர்ந்து செல்லப் போகின்றதா? பொருட்களுக்கான விலையுயர்வு ஒரு பக்கம் ... நாட்டின் பொருளாதார பிரச்சினை மறுபக்கம் ... வேலையில்லாத தவிப்பு .... பொருட்களுக்கான தட்டுப்பாடு .... இப்படியாக பல சிக்கல் சிந்தனையுடன் தான் பலரும் புதிய ஆண்டிற்குள்ளே காலடி பதித்திருக் கின்றோம். கடந்த ஆண்டு இவற்றோடு கூட வீதி விபத்துக்கள், இயற்கை அனர்த்தங்கள், எரிவாயு வெடிப்புக்கள் என பல நிகழ்வுகளும் எம்மில் பலருக்கு இருள் சூழ்ந்த பக்கங்களாகவே இருந்தன.

இவ்வாறிருக்க ஆண்டின் ஆரம்பத்திலேயே நாம் திருக்காட்சிப் பெருவிழாவை (02.01.2022) கொண்டாடி னோம். அந்த 03 ஞானிகளும் விண்மீன் வழிநடத்த மீட்பராம் குழந்தை இயேசுவைக் கண்டுகொண்டார்கள். விண்மீன் அவர்களுடைய கண்களில் இருந்து மறைந்த ஒரு சந்தர்ப்பம் இருந்தது. அதுதான் அவர்கள் ஏரோதுவைப் பார்க்க சென்றவேளை விண்மீன் மறைந்தது. ஏனெனில் ஏரோது, நெஞ்சிலே வஞ்சகமும், அதிகார மோகமும் கொண்டிருந்தான். தீயோனாகிய அவனுடைய இந்த பாவநிலை இருள் சூழ்ந்த ஒரு நிலை. ஞானிகள் அவனிடம் வழிகேட்க சென்றபோதுதான் இருள் சூழ ஒளி மறைகிறது. எப்போது அவர்கள் தீயோனிடமிருந்து வெளியே வந்தார்களோ அங்கே மீண்டும் விண்மீன் தோன்றுகின்றது.

அன்பார்ந்தவர்களே இவ்வாறு எமது வாழ்விலும் கிறிஸ்துவை பிரதிபலிக்கும் பல விண்மீன்கள் தோன்றினா லும் எமது தீய நாட்டங்களால் அவை எமக்கு தென்படுவதில்லை. நாமும் இருள்சூழ்ந்துள்ள பாவ வாழ்விலிருந்து விடுபடும்போது அல்லது வெளிவரும்போது இந்த ஒளியின் வழிகாட்டலை நாம் பிறரிலிருந்து பெறமுடியும்.

மேலே குறிப்பிட்டதைப்போன்று இயற்கை நிகழ்ச்சிகள் வாழ்வின் இருள்சூழ்ந்த நிலையாக வருவது தவிர்க்க முடியாதது. ஆனாலும் நம்பிக்கை தளராமல் முயற்சி எடுத்து துணிவோடும் நம்பிக்கையோடும் நேரிய உள்ளத்தோடும் நாம் பயணம் செய்யும்போது இருளை அகற்றும் இயேசுவின் ஒளி எமது பாதைக்கு வெளிச்சமாக வும், வாழ்வுக்கு வழியாகவும் வரும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.

பிறந்திருக்கும் புத்தாண்டு மங்களகரமானதாகவும், மகிழ்ச்சி நிறைந்ததாகவும் அமைய இறைவன் அருள்கூர்வாராக!

- ஆசிரியர் -

**"வழிவழிச் சொத்தின் எல்லையை மாற்றி அமைக்காதே உன் நிலத்தின் எல்லையைத் தள்ளித் தள்ளி, திக்கற்றவர்களின் நிலத்தை எடுத்துக்கொள்ள முயலாதே."**

[நீதிமொழிகள் 23:10]

# இறைவனின் மீட்புத் திட்டத்தில்

## அன்னை மரியாவின் பங்கு



- பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை -
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்



**"தை** பிறந்தால் வழி பிறக்கும்" என்றார்கள் நம் ஆன்றோர். இது நம்பிக்கையின் வெளிப்பாடு. இன்று ஒருவர் தனது வீட்டுத் தோட்டத்தில் மாமர விதையொன்றை விதைக்கின்றார் என்றால் அதன் காரணம் எதிர்காலத்தில் அவ்விதை மரமாக வளர்ந்து வீட்டில் உள்ளவர்கள் வயிறாற உண்ண நற்கனிகளை விளைவிக்கும் என்ற நம்பிக்கையின் செயல்பாடு என்பதைப் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. பயிர்கள் செழித்து வளரக் காரணமான கதிரவனுக்குத் தை திங்கள் முதலாம் நாள் பொங்கல் வைத்து தமிழர்கள் நன்றி தெரிவிக்கின்றனர். பொங்கல் விழா நன்றியின் விழாவாக கொண்டாடப்படு கின்றது. இவ்விதமாக நம்மைச் சுற்றி நடைபெறும் ஒவ்வொரு விடயத்துக்கும் நாம் அர்த்தம் காண்கிறோம்.

திருத்தந்தை பிரான்சிஸ் தை மாதம் 1ம் திகதி நாம் கொண்டாடும் இறைவனின் தாய் அன்னை மரியா திருவிழாவை முன்னிட்டு தன் மூவேளை செப உரையில், "இறை மகனின் மீட்புத் திட்டத்தில் அன்னை மரியா நெருக்கமான முறையில் பங்கு பெற்றார் என்பதை மையமாக வைத்து விளக்கமளித்ததை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தாய்க்கும் மகனுக்கும் உள்ள தொடர்பை எடுத்துக்காட்டும் வகையில் தம் மகனை பெண்ணிடம் பிறந்தவராகக் கடவுள் அனுப்பினார் என இன்றைய விழா துவங்குகிறது" என உரைத்த திருத்தந்தை, இறைவனின் மீட்புத் திட்டத்தில் இருந்து தன்னை ஒதுக்கிக் கொள்ளாத அன்னை மரியா அதனோடு மிக நெருங்கிய விதத்தில் ஒன்றித்திருந்து செயல்பட்டார் என்பதையும் சுட்டிக் காட்டினார்.

### மீட்புத் திட்டத்தில் மரியா :

மீட்புத் திட்டத்தில் தன் பங்கையும் அறிந்திருந்த அன்னை மரியா, இயேசுவின் தாய் என்ற உணர்வினால் நிறைவு கொண்டு, தன்னை மூடிக்கொள்ளவில்லை. மாறாக, தன்னைச் சுற்றி நடப்பவை ஒவ்வொன்றிற்கும் தன்னைத் திறந்தவராகச் செயல்பட்டதுடன், அவை குறித்து அக்கறை கொண்டவராகவும் இருந்தார். **"ஆம்"** என்ற வார்த்தை மூலம் மீட்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான தன் ஆவலை வெளிப்படுத்திய அன்னை மரியா, அதன்பின் அமைதி காக்கவில்லை. மாறாக, ஒவ்வொரு நாளும் இறைவன் தம்மிடமிருந்து எதிர்பார்ப்பதைப் புரிந்து கொள்ள முயன்று வந்தார்.

முதல் ஏவையால் ஏற்பட்ட கறையைப் போக்க புதிய ஏவாளாகத் தேர்ந்து கொள்ளப்பட்டார் மரியா. இறைவனின் திட்டத்தில் முன்குறித்து வைக்கப்பட்டவர் மரியா. புனித பவுல் கூறுவதைப் போன்று "தாம் முன்குறித்து வைத்தோரை அவர் அழைத்திருக்கிறார் தாம் அழைத்தோரைத் தமக்கு ஏற்புடையோராக்கியிருக்கிறார். தமக்கு

ஏற்புடையோரைத் தம் மாட்சியில் பங்குபெறச் செய்தார்" (உரோ 8:30).

மரியா தம் அழைப்பிற்கேற்பத் தம்மை மாற்றிக்கொண்டார். மரியா விலையுயர்ந்த ஆடை அணிந்தும், தங்க நகை அணிந்தும் தம்மைப் பெருமைப்படுத்திக்கொள்ளவில்லை. மாறாக நாணத்தோடும் தன்னடக்கத்தோடும் கூடிய ஆடைகளை அணிந்தார். அவரது உள்ளம் பணிவு, தாழ்மை, அமைதி, தூய்மை, கடவுளின் திருவுளத்தின்படி வாழும் நற்பண்புகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வாக்கு மனித உடலை எடுப்பதற்காக கடவுளின் கோவிலாக உலகில் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் மரியா. கடவுள் கபிரியேல் எனும் தூதரை மரியாவிடம் அனுப்பினார். அவர் மரியாவுக்குத் தோன்றி "அருள்மிகப் பெற்றவரே வாழ்க. ஆண்டவர் உம்மோடு இருக்கிறார். கடவுளின் அருளை அடைந்துள்ளீர். இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர். அவருக்கு இயேசு என்று பெயரிடுவீர் என்றார்" (லூக் 1:26). மரியா **"ஆம்"** என்ற ஒரே வார்த்தையையே, இறுதிவரை கூறி நின்றார். **"ஆண்டவரின் அடிமை"** என்ற சொல்லுக்குள் ஆண்டவருக்கு ஊழியம் செய்தல், பணிவு, தாழ்மை, கீழ்படிதல், அடக்கம் போன்ற நற்பண்புகள் அடங்கியிருக்கின்றன. "அடக்கம் ஆயிரம் பொன்னுக்குச் சமம்" என்பது நம் நாட்டுப் பழமொழியாகும்.

### இறைவனின் மீட்புத் திட்டத்தில் என் பங்கு என்ன?

* அவர் குழந்தையாய் வந்துள்ளார். நானும் குழந்தையாய் மாற வேண்டும். அப்போது தான் நான் அவரைக் காணமுடியும். இதுவும் ஒரு விந்தை. ஆழ்ந்த பொருளுள்ள சிந்தை.

* இயேசு திருமுழுக்கு யோவானைப் பற்றி இரு அடையாளங்கள் தருகிறார்

- **"காற்றினால் அசையும் நாணலா?"** (லூக் 7:24). நாணல் என்பது எந்தப் பக்கம் காற்றடிக்கிறதோ, அந்தப் பக்கம் வளைந்து கொடுக்கக்கூடியது. மனிதர்களில் பலர் நாணல்போல இந்த உலகம் எந்தப் பக்கம் போகிறதோ அந்தப் பக்கம் சாயக் கூடியவர்கள். இவர்கள் தங்களுக்கென நிலைப்பாடு எதுவும் இல்லாதவர்கள். "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்று போகின்றவர்கள். ஆனால் திருமுழுக்கு யோவான் அப்படிப்பட்டவரல்லர் என்ற உண்மையைச் சுட்டிக் காட்டவே இயேசு மேற்கண்ட கேள்வியை எழுப்புகிறார். அவர் நீதியின் சார்பாக நிலைப்பாடு எடுத்தவர்; கொஞ்சமும் வளைந்து கொடுக்காமல் உண்மையை உரக்கச் சொன்னவர்; இதற்காகவே தன் உயிரையும் இழக்கத் துணிந்தவர்.

- **"மெல்லிய ஆடை அணிந்த மனிதரையா?"** (லூக் 7:25). மெல்லிய ஆடை அல்லது பளபளப்பான ஆடை என்பது பணக்காரத் தன்மையையும் செல்வச் செழிப்பையும் சுட்டிக் காட்டுகிறது (காண். யாக் 2:2 1பேதுரு 3:3). மெல்லிய ஆடை அணிந்தோர் தங்களது நம்பிக்கையை பணத்தில் வைக்கின்றனர். செல்வச் செழிப்பில் மிதப்போர் மனிதரில் நம்பிக்கையை வைக்கின்றனர். ஆனால் திருமுழுக்கு யோவானோ ஒட்டக முடியை ஆடையாக அணிந்திருந்தவர் (மாற் 1:6). அவரது எளிய வாழ்வு இறைவன்மீது அவர் கொண்டிருந்த ஆழமான நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றது. இந்த ஆழ மான நம்பிக்கையே அவரை இறைவாக்கினரை விட மேலானவராக மாற்றியது.

* **புனித பேதுரு** கூறும் அறிவுரையும் இறைவனின் மீட்புத் திட்டத்தில் என் பங்களிப்பை வெளிப்படுத்துகின்றது. "நீங்கள் கடவுளுடைய பல்வகை அருள் கொடைகளின் சீரிய பொறுப்பாளர்கள். எனவே உங்களுள் ஒவ்வொருவரும் தாம் பெற்றுக் கொண்ட அருள் கொடையைப் பயன்படுத்தி ஒருவருக்கொருவர் பணி புரியுங்கள்" (1பேதுரு 4:10).

* **புனித பவுல் அடிகளாரும்** இறைவனின் மீட்புத் திட்டத்தில் எவ்வாறு பங்கு கொள்ளலாம் என்பதை அழகாகக் கூறுகின்றார். "எந்நிலையிலும் மனநிறைவோடு இருக்கக்

கற்றுக்கொண்டுள்ளேன். எனக்கு வறுமையிலும் வாழத் தெரியும் வளமையிலும் வாழத் தெரியும் வயிறார உண்ணவோ, பட்டினி கிடக்கவோ, நிறைவோ, குறைவோ எதிலும் எந்தச் சூழலிலும் வாழப் பயிற்சி பெற்றிருக்கிறேன். எனக்கு வலுவூட்டுகிற வரின் துணைகொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு" *(பிலி 4:11-13).*

* இறுதியாக **அன்னை தெரேசாவுக்கு** 2016ஆம் ஆண்டு செப்டம்பர் 4ம் திகதி புனிதர் பட்டம் வழங்கி சிறப்பித்த திருத்தந்தை பிரான்சிஸ் கூறியது:

*"எண்ணம் நன்றாக இருந்தால்*
*செயல் நன்றாக இருக்கும்!*
*செயல் நன்றாக இருந்தால்*
*நடத்தை நன்றாக இருக்கும்!*
*நடத்தை நன்றாக இருந்தால்*
*வாழ்க்கை நன்றாக இருக்கும்!"*

அன்னை தெரேசாவின் எண்ணமும், செயலும், நடத்தையும் புனிதத்தையே நம்மிடம் கொண்டு வந்தன என்றால் அது மிகையாகாது.

"அடித்தளம் நன்றாக இருந்தால்
கட்டிடம் உறுதியாக இருக்கும்"

"பேசத் தெரியாதவர் சார்பாகப் பேசு; திக்கற்றவர்கள் எல்லாருடைய உரிமைகளுக்காகவும் போராடு.

அவர்கள் சார்பாகப் பேசி நியாயமான தீர்ப்பை வழங்கு; எளியோருக்கும் வறியோருக்கும் நீதி வழங்கு."

**- நீதிமொழிகள் 31 : 8-9**

"சிட்டுக் குருவியும் அடைக்கலான் குருவியும் பறந்து திரிவது போல, காரணமின்றி இட்ட சாபமும் காற்றாய்ப் பறந்துபோகும்."

**- நீதிமொழிகள் 26 : 2**

# பார்வைகள் பலவிதம் - 09

- ஹென்றி -



மகான் ஒருவர் சாலையோரமாக நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது இளைஞன் ஒருவன் ஒரு மரத்திற்குக் கீழே மிகவும் சோகமாக அமர்ந்திருந்தான். அவனைப் பார்த்ததும், மகான் அவனருகே சென்று, காரணத்தைக் கேட்டார். அதற்கு அவன் "என் நண்பன் ஒருவன் நீண்ட நாட்களாக நோய்வாய்ப்பட்டுக் கிடந்தான். நேற்றைய தினத்தில் அவனுக்கு உடம்பு மிகவும் முடியாமல் போகவே மருத்துவமனையில் சேர்த்து அருகாமையிலே இருந்து அவனைக் கவனித்துக் கொண்டேன். இப்போதுதான் வீடு திரும்பினேன்" என்றான். உடனே மகான்,

"நல்ல காரியம் செய்திருக்கிறாய். உன்னுடைய நண்பன் விரைவில் குணமடைந்து விடுவான். நீ ஒன்றும் கவலைப்படாதே" என்று அவனைத் தேற்றினார். ஆனால், அப்போதும் அவன் சோகமாக இருப்பதைப் பார்த்த மகான் அவனிடம் "நீ உன் நண்பனுக்கு உதவி செய்யும்போது என்ன நினைத்துக்கொண்டு செய்தாய்?" என்று வினவினார். அவன் மறுமொழியாக "என்னுடைய நண்பனுக்கு எவ்வளவு உதவிகள் செய்கிறோம். இதேபோன்று நாம் கஷ்டப்படும்போது நமக்கு உதவி செய்வானா? என்ற எண்ணத்தோடுதான் செய்தேன்" என்று பதிலளித்தான்.

அதற்கு அந்த மகான் "இதுதான் நீ செய்த மிகப்பெரிய தவறு. நான் என்னுடைய நண்பனுக்கு உதவி செய்வதுபோல, அவனும் எனக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்போடுதான் நீ உதவி செய்திருக்கிறாய். ஒருவேளை அவன் நீ செய்த உதவியைவிட குறைவாகச் செய்தால், நான் உதவி செய்த அளவுக்கு அவன் எனக்கு உதவி செய்யவில்லையே என்று குறைபட்டுக்கொள்வாய். இது உண்மையான நட்புக்கு இலக்கணம் அல்ல" என்று சொல்லி முடித்துவிட்டு "எந்த ஒரு எதிர்பார்ப்பின்றி செய்யப்படும் உதவிதான் உண்மையான உதவியாகும்" என்று சொல்லி முடித்தார்.

இதைக்கேட்ட அந்த இளைஞன் மனத்தெளிவு பெற்று மகிழ்வோடு தன் வழியில் சென்றான்.



# கிறிஸ்தவம்

க.பொ.த உயர்தரம்

# மாணவர் பக்கம்

## மாதிரி வினாத்தாள் - பகுதி - 1

- நில்மினி கஜேந்திரன்

**தொடர்** XI

**மாணவர் பக்கம்**

டிசம்பர் 2021

விடைகள்

| | | |
|---|---|---|
| 1) 2 | 5) 3 | 9) 5 |
| 2) 1 | 6) 3 | 10) 3 |
| 3) 5 | 7) 3 | |
| 4) 4 | 8) 2 | |

**1. படைப்பு தொடர்பான முதற்கதை, அடங்கிய முதற்பிரதியில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் பெயரிடவில்லை. அதற்கான காரணம்.**

1. படைப்பின் ஏழுநாட்களுள்ளும் இவை படைக்கப்படவில்லை
2. சூரியன் சந்திரனின் பெயர்கள் பிரபல்லியமாகவில்லை
3. பல தெய்வங்களை வழிபடும் சூழலில் பல தெய்வ வழிபாட்டுக்கு எதிராக அக்கதை எழுதப்பட்டமையால்
4. சூரியன் சந்திரன் பெரிய, சிறிய ஒளிப்பிழம்பு என இலகுவாய் அழைக்கப்பட்டதால்
5. சூரியனும் சந்திரனும் அரசர்களின் பெயர்களாய் இருந்ததால்

**2. மனிதன் இறைச்சாயலில் படைக்கப்பட்டதன் மூலம் அவன் படைப்புத் தொழிலில் பங்காளியாக முழு உலகையும் ஆளுவதற்கு அழைக்கப்பட்டான். இங்கு 'ஆளுதல்' (எபிரேய 'றதர்') எனும் வினைச் சொல்லினால் விளக்கப்படுவது.**

1. பாதுகாத்துக்கொள்ளல் 2. மன்னித்தல் 3. இணங்குதல்
4. அடிமைப்படுத்தல் 5. ஏற்றுக்கொள்ளல்

**3. திருவிவிலியத்திற்குரிய சில நூல்களின் சோடிகள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஐந்நூலுக்குரிய நூல்களின் சோடிகள் ஆவன.**

1. நீதித்தலைவர், ரூத் 2. எஸ்ரா, எரேமியா 3. எண்ணிக்கை, லேவியர்
4. ரூத், எஸ்தர் 5. இறைவாக்கினர், நீதித்தலைவர்

**4. படைத்தலின் இரண்டாவது கதைக்கும், விடுதலைப்பயண நிகழ்விற்கும் தொடர்பு உண்டென்பதைக் காட்டும் சம்பவம்.**

1. ஏதேனில் வாழும் முறையை கட்டளையாகக் கொடுத்தது, பத்துக் கட்டளைகளை பயணத்தின்போது வழங்கியது
2. ஆடைகளால் அணிவித்தது, இரக்கம் காட்டியது
3. கட்டளை மீறியது, மீண்டும் இரக்கம் காட்டியது.
4. தண்டனை வழங்கியது, இரக்கம் காட்டியது.
5. மனம்போனபடி வாழ்ந்தது, இரக்கம் பெற்றது.

**5. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மனிதன் கடவுளைப் பிரிந்து சென்றமை உச்சக்கட்டத்தை அடைந்து, பின்னர் மீண்டும் மனிதன் அப்பயணத்தை எதிர்த்திசை நோக்கி திருப்பும் செயற்பாடு யாருடன் ஆரம்பமானது?**

1. ஆபிரகாமுடன் 2. நோவாவுடன் 3. ஈசாக்குடன்
4. ஏனோக்குடன் 5. யாக்கோப்புடன்

**6. மனிதன் என்பதற்குரிய எபிரேயச் சொல்லாக அமைவது.**

1. கடவுள் 2. அக்கல்டாமா 3. ஆதாமா 4. ஆபார் 5. அதமாஹ்

**7. மண்ணுக்காய் பயன்படுத்தப்படும் எபிரேயச் சொல் எது?**

1. விமார் 2. அதார் 3. ஆபார் 4. ஈஷா 5. ஷாலோம்

**8. திருவிவிலியத்திற்கு உரியதல்லாத மரம் எது?**

1. வாழ்வு தரும் மரம் 2. நன்மை தீமை அறியும் மரம்
3. அபிஷேக மரம் 4. அப்பிள் மரம் 5. அத்திமரம்

**9. ஏவாளைக் குறிக்கும் எபிரேய வார்த்தை எது?**

1. விலோம் 2. விமார் 3. இதார் 4. ஈஷ் 5. அக்தார்

**10. கானானியர் காலத்தில் 'அஷேரா' தேவதை எதன் அடையாளமாய் சித்தரிக்கப்பட்டாள்?**

1. புல் 2. பசு 3. காளை 4. பாம்பு 5. புறா



# அன்பியங்களின்



## வரலாற்றுப் பின்னணி

அருட்தந்தை பிறைனர் செலர்

"உங்கள் மூதாதையர் மீது பற்று வைத்து அன்பு கூர்ந்தார். அவர்களுக்குப் பின் அவர்களுடைய வழிமரபினராகிய உங்களை எல்லா மக்களினங்களினின்றும், இந்நாளில் இருப்பது போலத் தெரிந்துகொண்டார்" (இணைச்சட்டம் *10:15*). இவ்வாறு இறைவன் மனிதனோடு ஒன்றித்து அன்புகூர்ந்ததால் அதைப்போல மனிதனும் இறைவனோடும் மனிதனோடும் ஒன்றிக்கச் செய்யும்படி கட்டளைகளைக் கொடுத்தார்.

iv. வண்டி ஓட இரண்டு சக்கரங்கள் தேவை. அது போன்று அச்சாணியாக வருபவை இரண்டு அன்பு கட்டளைகள். இதை இயேசு சொல்லும் போது இவ்வாறு சொல்லுகிறார்.

"உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழுமனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து" இதுவே தலைசிறந்த முதன்மையான கட்டளை.

"உன்மீது நீ அன்புகூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும், அன்பு கூர்வாயாக" (மத். *22:37-39*)

இதுவே நமது வாழ்க்கைச் சட்டமாக வழிபாட்டிற்கு ஆதாரமாக அமைகிறது.

v. பாவிகளுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்ட பாஸ்கா பலியை நாம் நாள்தோறும் நினைவு கூர்ந்து திருப்பலியாக ஒப்புக் கொடுக்கிறோம். அதுவே இன்றைய திருச்சபையின் வழிபாட்டின் மைய இடத்தைப் பெறுகிறது.

"தாம் தூயவராக்கியவர்களை ஒரே பலியினால் என்றென்றைக்கும் நிறைவுள்ளவராக்கினார்" (எபிரேயர் *10:14*).

ஒன்றிப்பின் நிறைவை எய்தும் அளவிற்குத் திருப்பலி என்னும் வழிபாட்டு முறையிலே ஆற்றல் இருப்பதை உணர்ந்தே அன்பியங்களில் குழுத் திருப்பலி முக்கிய இடம் வகிக்கிறது.

### 5. ஒன்றிப்பிற்காக உதவும் கருவிகள்:

இறைவனிலே சங்கமம் ஆகவேண்டும் என்ற ஏக்கம் மனிதனை இத்தகைய ஒன்றிப்பிற்கான வழிகளை நாடி தேடச் செய்தது.

**i)** இயற்கையோடு தன்னை இணைத்துக் கொண்டு படைப்பிற்காக இறைவனைப் புகழும்போது, அவரது பெயரை ஏற்றிப் போற்றும்போது இறைவனோடு ஒன்றிப்பதை உணர்ந்தான்.

"மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை. நிலவுலகும் அதில் வாழ்வனவும் அவருக்கே சொந்தம் ஏனெனில் அவரே கடல்கள் மீது அதற்கு அடித்தளமிட்டார். ஆறுகள் மீது அதை நிலை நாட்டினவரும் அவரே" (திருப்பாடல் *24:1-2*).

இவ்வாறு திருப்பாடல்களில் இறைவனைப்பாடி இறைவனோடு ஒன்றிக்க முயற்சி செய்தான் மனிதன்.

**ii)** அடுத்தது இறப்பிற்கு அப்பாலும் நிலைத் திருக்கக்கூடிய ஒன்றிப்பில் இறைவனின் பிரசன்னத்தை அனுபவிப்பதற்கான ஆர்வமிக்க விண்ணப்பம் மனிதனுடையது. அதற்கான ஏக்கம் முக்கியமானது.

> "கலைமான் நீரோடைகளுக்காக ஏங்கித் தவிப்பதுபோல் கடவுளே! என் நெஞ்சம் உமக்காக ஏங்கித் தவிக்கின்றது.
> என் நெஞ்சம் கடவுள்மீது, உயிருள்ள இறைவன் மீது தாகம் கொண்டுள்ளது:
> எப்பொழுது நான் கடவுள்
> முன்னிலையில் வந்து நிற்கப்போகின்றேன்? (திருப்பாடல் *42:1-2*)

உலகைக் கடந்து உயிர் உன்னதரைச் சந்திக்க ஏங்கும் ஆத்மதாகம் இதிலே வெளிப்படுகிறது. அதனால்தான் நம் திருச்சபை புனிதர்களோடு உள்ள ஒன்றிப்பையும் நினைவு கூருகிறது *(Communion with saints).*

> "பூவுலகில் உள்ள தூயோர் எவ்வளவோ உயர்ந்தோர்!
>
> அவர்களோடு இருப்பதே எனக்குப் பேரின்பம்" (திருப்பாடல் *16:3*)

**iii)** அடுத்ததாக பகிர்தலில் வருவது ஒன்றிப்பு. பிறரோடு ஒன்றிக்க உதவும் உன்னத கருவி பகிர்தல்.

> "நன்மை செய்யவும் பகிர்ந்து வாழவும் மறவாதீர்கள்
> இவ்வகைப் பலிகளே கடவுளுக்கு உகந்தவை" (எபி *13:16*)
>
> "வறுமையுற்ற இறைமக்களோடு உங்களிட முள்ளதைப் பகிர்ந்து கொள்ளுங்கள்"
> (உரோ *12:13*)

இவ்வாறு பகிர்வது ஒன்றிப்பின் சிறந்த கருவி என்பதை அன்பியம் உணர்ந்து செயலாற்றுகிறது.

**iv)** நீதிக்காகப் போராடுவதிலும் ஒன்றாக சேர்ந்து உரிமையைப் பெற்றுக்கொள்வதிலும் இதய ஒன்றிப்பு ஏற்பட வழி உண்டு.

> "நீங்கள் எங்கள் துன்பத்தில் பங்கெடுத்த தைப்போல் எங்களுடைய ஆறுதலிலும் பங்குபெறுவீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும்" (2 கொரி *1:7*)
>
> "நீதி வெள்ளமெனப் பொங்கி வருக!
> நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்து வருக!"
> (ஆமோஸ் *5:24*)

இத்தகைய செயல்பாடுகளும் ஒன்றிப்பின் சிறந்த கருவி என்று உணர்ந்து அன்பியங்கள் இதை வாழ்க்கை முறையாக்கி உள்ளன.

## 6. ஒன்றித்த குடும்பங்களே யாவேயின் சமூகம்:

இறைவன் படைப்பிலே உன்னதமான படைப்பு குடும்பம். ஒருவர் ஒருவரைச் சார்ந்து, மனம் ஒன்றித்து வாழும் தம்பதியர் இறைவனுக்கு மிகவும் விருப்பமானவர்கள் ஆவர். இத்தகைய ஒன்றித்த குடும்பங்கள் இணைந்து அன்பு சமூகமாக வாழ்வதே அன்பியம். மக்களிடையிலான இதயங்க ளின் ஒன்றிப்பானது உடன்படிக்கையின் விளைவா கும். குடும்பம், குலம், கோத்திரம் என்ற பிரிவினை களைக் கடந்து 'ஒரே வானகத்தந்தையின் மக்கள் நாம். அதனால் நாம் எல்லாரும் ஓரினம்" என்று சொல்லி "யாவேயின் சமூகமாக" - புதிய இஸ்ர யேல் சமூகமாக பூவுலம் மாறவேண்டும். ஒருவ ரோடு ஒருவர் ஒன்றிக்கும்போது பிரிவினைகள் மறைந்து குடும்பங்கள் தங்களிலே ஒன்றித்து வாழும். குடும்பங்கள் இணைந்து குவலயம் ஒன்றித்து, தழைத்துச் செழிக்க வேண்டும்.

## 7. ஒன்றிப்புக்குத் தேவை ஒரே மனம்:

i) அன்பியங்கள் இணைந்து ஒன்றித்துவாழ இன்றியமையாதது ஒன்றித்த மனதாகும். அதைப் பற்றிக் குறிப்பிடும் தூய பவுலடிகள்,

> "சகோதர சகோதரிகளே, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரால் நான் உங்க ளைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்வது இதுவே: நீங்கள் ஒத்த கருத்துடையவர்களாய் இருங் கள். உங்களிடையே பிளவுகள் வேண்டாம். ஒரே மனமும் ஒரே நோக்கமும் கொண்டி ருங்கள்" (1கொரி *1:10*).

ii) இவ்வாறு ஒருமனப்பட்டு வாழும்போது விண்ணகத் தந்தை மகிமை பெறுவார். ஒரே

மனதுடன் தொடர்ந்து உறுதியுடன் இருக்க வேண்டும். எனவே, "கிறிஸ்து இயேசுவின் முன்மாதிரிக்கேற்ப நீங்கள் ஒரே மனத்தினராய் இருக்குமாறு மன உறுதியையும் ஊக்கத்தை யும் தரும் கடவுள் உங்களுக்கு அருள் புரிவாராக! இவ்வாறு நீங்கள் அனைவரும் ஒருமனப்பட்டு, நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் கடவுளும் தந்தையுமானவரை ஒருவாய்ப்பட போற்றிப் புகழ்வீர்கள்" (உரோ *15:5-6*) என்று சொல்லப்பட்டுள்ளது.

iii) ஒரே மனத்துடன் செயல்பட வேண்டும் என்றால் மிகச் சிறந்த வழி பிறரை நம்மைவிட உயர்வாகக் கருதவேண்டும். இதைக் குறித்து சொல்லும் தூய பவுலடிகள், "நீங்கள் ஒரே எண்ணமும் ஒரே அன்பும் ஒரே உள்ளமும் கொண்டவர்களாய்த் திகழ்ந்து, ஒரு மனத்தவ ராயிருந்து என் மகிழ்ச்சியை நிறைவாக்குங்கள். கட்சி மனப்பான்மைக்கும் வீண் பெருமைக்கும் இடம் தரவேண்டாம். மனத் தாழ்மையோடு மற்றவர்களை உங்களிலும் உயர்ந்தவராகக் கருதுங்கள்" (பிலிப் *2:2-3*) என்று அறிவுரை கூறுகிறார். உண்மையிலே மிகச் சிறந்த ஆலோசனை இது என்பதில் சிறிதும் சந்தேக மில்லை.

iv) ஒருமனம் வேண்டுமென்றால் ஒரே தந்தையின் மக்கள் என்ற குடும்ப உணர்வு இருந்தால் ஒருவரையொருவர் அன்புடன் தாங்கி நடக்க முடியும்.

"முழுமனத் தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரையொருவர் அன்பு டன் தாங்கி, அமைதியுடன் இணைந்து வாழ்ந்து, தூய ஆவி அருளும் ஒருமைப் பாட்டைக் காத்துக்கொள்ள முழுமுயற்சி செய்யுங்கள். நீங்கள் ஒரே எதிர்நோக்கு கொண்டு வாழ அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஒரே எதிர்நோக்கு இருப்பதுபோல, உடலும் ஒன்றே: தூய ஆவியும் ஒன்றே. அவ்வாறு ஆண்டவர் ஒருவரே: நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே: திருமுழுக்கு ஒன்றே. எல்லாருக்கும் கடவுளும் தந்தையுமானவர் ஒருவரே: அவர் எல்லாருக்கும் மேலானவர்: எல்லார் மூலமாகவும் செயலாற்றுபவர்: எல்லாருக்குள்ளும் இருப்பவர்" (எபேசியர் *4:2-6*). ஒவ்வொரு மனிதனிலும் இறைவன் இருக்கிறார் என்ற உணர்வே ஒரு மனத்துடன் செயல்பட எளிதாக வழிகாட்டும்.

எ) தூய ஆவியாரிடம் கேட்கும்போது ஒரு மனப் பட்ட இதயத்தை அருளக்கூடியவர் அவர். இதைக் குறிப்பிட்டுச் சொல்லும் எசேக்கியேல், "நாம் அவர்களுக்கு ஒருமனப்பட் இதயத்தை அருளுவோம்; அவர்கள் உள்ளத்தில் புதிய ஆவியை ஊட்டுவோம்; கல்லான இதயத்தை எடுத்துவிட்டு உணர்ச்சியுள்ள இதயத்தைக் கொடுப்போம்" (எசேக்கியேல் *11:9*) என்று சொல்லுவதாக பழைய மொழிபெயர்ப்பில் சொல்லப்பட்டுள்ளது.

அன்பியங்களில் ஒரே மனம் கொண்டு செயல் பட இந்த ஆலோசனைகள் பெரிதும் உதவும். ஒரே விண்ணகத் தந்தையின் பிள்ளைகளான நாம் அனைவரும் ஒரே குடும்பம் "யாவேயின் சமூகம்". சிறு சிறு அன்பிய சமூகங்களாக வாழ்ந் தாலும் அனைவரும் உடன்பிறப்புகள். எனவே, ஒருவரை ஒருவர் உயர்வாக மதித்து ஒரே நோக்கம் கொண்டு ஒரே மனத்தினராய் வாழும் போது இந்த ஒன்றிப்பு வாழ்வு நிலைக்கும்.

– முற்றும்

## சமையலறையில் ... சமையலில் ...

- அதிக அளவு பாலாடை தேவைப் படுகிறவர்கள் கொதித்து ஆறிய பாலை மூடாமல் ஃப்ரிட்ஜில் வைத்துவிடுங்கள். சிறிது நேரத்திலேயே அதிக அளவு பாலாடை தோன்றிவிடும்.
- கறிவேப்பிலை, கொத்தமல்லியை ஃப்ரிட்ஜில் வைக்கும்போது மஸ்லின் துணியில் சுற்றி வைத்தால், நிறம் மாறாமல் பச்சைப் பசேலென இருக்கும்.
- துவரம் பருப்புடன் இரண்டு மஞ்சள் பூசணித் துண்டுகள் (அ) சர்க்கரை வள்ளிக் கிழங்கு துண்டுகளை சேர்த்து வேகவைத்து, மசித்து, சாம்பாரில் சேர்த்தால்... சாம்பாரும் ருசிக்கும் துவரம்பருப்பின் அளவையும் குறைத்துக் கொள்ளலாம்.



# இறவா நம்பிக்கைகள்

டெனீஸ்டன் - *சொறிக்கல்முனை*



இறகுகள் விழுந்த பின்னும்
இன்னுமேன் சிறகு விரிக்கிறாய்...?
கூடுகள் எரிந்த பின்னும்
ஏன் குச்சி சேர்க்கிறாய்...?
வாழும் காலமெல்லாம் வரட்டு நம்பிக்கை
பட்ட மரத்தில் பழம் தேடும் குருடனாய்...

வெண்புறாவே வெண்புறாவே...
விடியலை குழி தோண்டி
புதைத்து விட்ட கதையறியாயோ!
சாவு மணிகளை காலம்
கை வலிக்க கை வலிக்க அடிக்கிறது.
ஈராண்டுகளாய் ஈரல் கருக
முகம் மறைக்கலானோம்...
மரத்தால் விழுந்து துடிக்கையிலே
மாட்டு பட்டிகளை ஏற்றும்
மதியீனன் கையில் பிரம்பா...
உண்மை சொல்ல உரக்கச் சொல்ல
வாய் முனைகின்ற போழ்தில்
வயிர் பிரச்சினையும் உயிர் பிரச்சினையும்
வாய் பூட்டிப் போடுதே!
நடப்பதன் நிலையறிந்து நான்
தொலைந்து போகவே கருதுகிறேன்.
கால் விலங்குகளை பூட்டிய கயவன்
எங்கோ கண்காணாது தொலைந்து விட்டான்
மாற்றங்களை பிரசவிக்க முடியாமல்
மலடு தட்டி போனாயோ மண்மாதாவே...

நாடொரு கோலம் வீடொரு கோலம்
நாமறியா கிருமியால் எங்கும் ஓலம்...
வருகிறது புதுக்காலம்
அது போடுமா விடியலுக்கோர் பாலம்...?

அந்தரத்தில் கதிரை போட்டு
அரசரென சொல்லிக்கொண்டு
செங்கம்பள வாழ்க்கை வாழ்வோரே
செத்தால் புதை குழி
அந்தரத்தில் இல்லையப்பா.

இறவாத நம்பிக்கைகளோடு
இன்னும் நீ சிறகு விரி வெண்புறாவே
நீ செத்துப் போகவில்லை
குச்சிகளை சேர்த்தெடு
மலடு தட்டிவிடவில்லை
நிச்சயம் விடியல் விரைந்தெழும்
மாற்றம் ஒன்று தான் மாறாதது என்றால்
இதுவும் கடந்து போகும்
இவ்வாண்டு விடியலின் கீதம் பாடும்!

தாகத்தால் தவிக்கும் ஒருவனுக்கு ஒரு சொட்டு
தண்ணீருக்கு முன்னால் ஓராயிரம் முத்துக்கள் மதிப்புள்ளது
ஆகாது. - **பாரசீகம்**

விடுதலையற்ற வாழ்க்கை உயிரற்ற ஓர் உடலை போன்றது.
**- கலீல் கிப்ரான்**

எல்லோரும் கொடை வள்ளலாகிவிட்டால் பூமியே
சொர்க்கமாகிவிடும். நரகம் என்பது கட்டுக்கதையாகிவிடும்.
**- கால்டன்**



# ஒரு வெண்மணற் கிராமம்

## காத்துக்கொண்டிருக்கிறது






**அத்தியாயம் 3**

தெய்வானை கட்டிலுக்கு சற்று தூரத்தில் நெருப்புச் சட்டியைக் கொண்டு வந்து வைத்து அதன் மேல் கொத்து கொத்தாக வேப்பங் குழை களை அடுக்கியபோது நெருப்புச் சட்டியிலிருந்து புகை எழுந்தது. ‘இந்தப் புகைக்கு எந்த நுளம்பும் வராது’ என்ற திருப்தியோடு அடுக்களைப் பக்கம் சென்றாள். அதன் கதவு சிக்காராகச் சாத்தப்பட்டுத் தான் இருந்தது. உள்ளே உறையிடப்பட்டிருந்த பாற் பேணிகள் இருந்தன. அவள் வளர்க்காத அயல் வீட்டுப் பூனைக்குத் தெய்வானை பயந்தாள். ‘பயப்படாதே இதோ நான் காவலுக்கு இருக்கிறேன்’ என்று சொல்வது போல கதவருகில் படுத்துக் கிடந்த வீரன், உறுமியது. அதன் உறுமலிற் திருப் தியை அடைந்தவளாகத் தெய்வானை மீண்டும் முன்பக்கமாக முற்றத்துக்கு வந்தபோது தாமோதரம் அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தான். இரவின் மௌனத்தைப் பிளந்து கொண்டு வடக்கே கட்டையாற்றுக் கரைசச்சப் பக்கமிருந்து மனிதக் குரல்கள் கேட்டுக் கொண்டிருந்தன. இரவு ஒன்பது மணிக்கு மேல் ஆலங்கேணி கிராமத்தில் அக்குரல் கள் பழக்கமானவைதான். ஆனால் அக்குரல்கள் கிராமத்தின் பல பக்கங்களிலுமிருந்து நாளுக்கு ஒரு இடத்திற் கேட்கும். இன்று வடக்கே கட்டை யாற்றுப் பக்கமாக இருந்து வருகிறது. ‘கொச்சியாண்ற வீட்டுப் பக்கந்தான் சத்தங்கேட்குது. சும்மா வெறியில கிடந்து கத்திறானுகள்’ என்று அலுத்துக் கொண்ட தெய்வானை மண்டப வாயில் சீமெந்துத் தரையில் முந்தானையை விரித்து படுத்துக் கொண்டாள். நன்றாக பூசிமினுக்கிய சீமெந்துத் தளத்தின் குளுமை பங்குனி மாத புழுக்கத்துக்கு இதமாக இருந்தது. படுத்ததும் தெய்வானை கண்ணயர்ந்து விட்டாள்.

* * * *

முற்றத்திலே படுத்திருந்த தாமோதரம் அதிகாலையிலேயே விழித்துக் கொண்டான். அவன் தாயார் சொன்னதுபோல அந்த அதிகாலை கடுமையான குளிராகத்தான் இருந்தது. அந்தக் குளிர்தான் அவனை எழுப்பிவிட்டிருக்க வேண்டும், எழுந்துவிட்ட தாமோதரம் கட்டிலில் விரித்திருந்த

சேலை மடிப்பை விரித்துக் கால்களையும் தலையையும் கூடச் சேலையால் போர்த்துக்கொண்டு மீண்டும் மல்லாந்து படுத்தான். அதிகாலைக் குளிருக்கு அந்தப் போர்வை இதமாக இருந்ததே தவிர நித்திரை வரவில்லை.

தலையை மூடியிருந்த சேலையை சற்று நெகிழ்த்தியபோது மாங்கொத்துகளினூடே அர்த்த சந்திரன் நிலவைப் பொழிந்து கொண்டிருந்தது. திடீரெனச் செட்டைகளைத் தட்டிக்கொண்டு சௌந்தரத்தின் வீட்டுப்பனிச்சை மரத்திலிருந்து சேவல் கூவியது. அதைத்தொடர்ந்து ஊரிலுள்ள எல்லாச் சேவல்களும் முறை வைத்துக் கூவின. அக்கூவல்களிடையே மணல் ஒழுங்கையில் சரசரத்துச் செல்லும் கட்டை வண்டிகளின் சப்தமும், கிலுகிலுத்துப் பறந்து செல்லும் கரிச்சான் குருவிகளின் ஓசையும் கேட்டன. தூரத்தே குட்டிக்கரச்சிப் பள்ளிவாயிலிருந்து பாங்கு சொல்லும் மோதீனின் குரல் காற்றிலிழைந்து வந்தது. இந்த மண்ணுலகத்து நல்லோசைகளையெல்லாம் கேட்டபடி படுத்துக் கொண்டிருந்தான் தாமோதரம்.

மண்டபத்தின் தாழ்வாரத்துப் பந்தலில் பற்றிப் படர்ந்திருந்த கொடிமல்லிகைப் பூக்களின் நறுமணத்தை அனுபவித்துக் கொண்டே தாமோதரம் கட்டிலில் மல்லாந்து படுக்கையில் கிழக்கு வெளுக்கத் தொடங்கிக் கூம்பிய முகைவிரிவது போலக் காலை மலர்ந்து கொண்டிருந்தது. வரவர மாட்டுவண்டிகளின் சப்தம் அதிகரித்தது. அவை மணல் ஒழுங்கையால் சென்று வேலும்மயிலும் கடைச்சந்தியிற் திரும்பி கரைச்சையில் இறங்குகையில் பாதி இடிந்திருந்த மதகிலே டொக்கென்று ஏறிவிழும் சப்தம் காலை நேரத்தில் நாராசமாகக் கேட்டது. அந்த ஒலியை மீறிக் கொண்டு பிள்ளையார் கோயிலிலிருந்து சங்கொலி கிளம்பியது.

அதற்கு மேலும் தாமோதரத்தாற் படுத்திருக்க முடியவில்லை. எழுந்து கட்டிலை மடக்கி மாமரத்தோடு சாத்தி வைத்துவிட்டுப் பின்னாலிருந்த மல்லிகைப் பந்தலைத் தாண்டி மண்டபத்துள் நுழைந்து சுவரின் ஆணியிற் தொங்கிய மெய்கண்டான் நாட்காட்டிக்கு மேலாகத் தொங்கிய சட்டையை எடுத்து உடம்பிலே மாட்டிக் கொண்டான். மண்டபத்துள்ளிருந்து பார்க்கையில் அடுக்களைக் குள்ளே விளக்கு எரிவது தெரிந்தது.

– அத்தியாயம் 4

**ஆ**னால் தாமோதரம் அடுக்களைப் பக்கம் செல்லாமல் மீண்டும் முற்றத்துக்கு வந்து தெருப்படலையைத் திறந்து தெருவோரத்தே நின்ற சின்னஞ் சிறிய வேப்பங்கன்றின் குச்சியை உடைத்துப் பல் விளக்கிக் கொண்டிருந்தபோது அவன் அண்ணா நாகேந்திரம் தோளிலே காவுதடியுடன் வந்து கொண்டிருந்தான். காவுதடியின் இரு அந்தங்களிலும் இரண்டு பெரிய தடிப்பான அட்டைப் பெட்டிகள் தொங்கிக் கொண்டிருந்தன. தாமோதரத்தைக் கண்டதும், “எப்ப தம்பி வந்தாய்?” என்று ஆச்சரியத்தோடு கேட்டான் நாகேந்திரம்.

‘நேற்றுத்தான் அண்ணா வந்தேன்’ என்றான் தாமோதரம். ஆனால் அவன் பதிலைக் காதில் வாங்கிக் கொள்ள நேரமில்லாதவனைப்போல் தெருவின் தகரக்கதவைத் தள்ளித் திறந்து கொண்டு தன் காவுதடியுடன் அடுக்களைப் பக்கமாகப் போய்க்கொண்டிருந்தான்.

அவனுக்குப் பின்னால் தெருக்கதவு தானாகவே மூடிக்கொண்டபோது கதவின் பின்னால் கயிற்றில் கட்டப்பட்டு மேலே உருளையிற் தொங்கிக் கொண்டிருந்த கல் பெருஞ்சத்தமாய்க் கதவில் முட்டிக்கொண்டது. வெளியே நின்ற தாமோதரம் தெருப்படலையை மெதுவாகத் திறந்து அண்ணனின் பின்னால் அடுக்களைப் பக்கஞ் சென்றான்.

அடுக்களைக்குட் சென்ற நாகேந்திரமும் அம்மாவும் அட்டைப் பெட்டிகளுக்குள்ளே தயிர்ப் பேணிகளை அடுக்கிக் கொண்டிருந்தனர். சின்னத் தங்கையும் அவர்கள் இருவருக்கும் உதவி செய்து கொண்டிருந்தாள். தயிர்ப்பேணிகளை அடுக்கிக் கொண்டே தெய்வானை கேட்டாள் “என்னாடா மனே, உன்னிட்ட இருந்து எனக்கு ஐம்பது ரூபா நிலுவையா இருக்கு. தாறகதையே கதைக்கிறாய் இல்ல. மாட்டுக்கார வல்லிபுரம் எனக்கென்ன சும்மாவா பால் தாரான்?” என்றாள்..... அம்மா.

“இன்றைக்கு வெள்ளிக்கிழமை. நேவில வேலை செய்கிறவனுக் கெல்லாம் சம்பளம். ஆனா அவன்கள் வீட்டவர ஐந்து மணிக்கு மேலாயிரும். அது மட்டும் நான் திருக்கிணாமலையில நிக்கேலா. நாளைக்கு நான் அவங்களிட்டக் காசப் பிரிச்சிடுவன். பின்னேரம் உனக்கு காசத்தருவன்” என்றான் நாகேந்திரம்.

'சரிதான். நாளைக்குக் காசு வராட்டி இந்த வியாபாரத்தையே நீ விட்டிற வேண்டியதுதான்' என்று மகனிடம் கண்டிப்பாய்ச் சொல்லிய தெய்வானை இரு பெட்டிகளிலும் சரியாக இரு நூற்றைம்பது பேணிகளை அடுக்கி முடித்தாள். அடுக்கி முடித்ததும் "இந்தா தேத்தண்ணி குடி" என்று அவனிடம் தேநீர்க் கோப்பையை நீட்டினாள்.

தேநீரை வாங்கிக் குடித்த பின்னர், நாகேந்திரன் தயிர்ப்பேணிகள் அடங்கிய பெட்டிகளை மெதுவாக வெளியிலே கொண்டு வந்து வைத்து, அவைகளின் மேலேயிருந்த கயிற்று வளையத்தில் காவுதடியின் இரு அந்தங்களையும் வாகவமாக நுழைத்துக் காவுதடியைத் தோளில் வைத்து இரு பக்கப் பாரத்தையும் சமன் செய்வதற்காய் தோளில் வைத்த காவு தடியைச் சற்றுப் பின்னால் நகர்த்தி நடக்கத் தொடங்கியதும் அவனது தங்கை முன்னால் ஓடிச் சென்று தெருக் கதவைத்திறந்து பிடித்தபடி நின்றாள்.

அடுக்களைக்குள்ளிருந்து அவனுடனே வெளியேறி நடந்து வந்த தெய்வானை "அதுசரி வெறும் பேணிகளைக் கொண்டு வரவில்லையே. "இன்றைக்கு என்னத்தில பாலூத்திறது?" என்று கேட்டாள்.

'நேத்துத் திருக்கிணாமலையால வர நல்லா நேரஞ் செண்டு போச்சு. அதால அப்படியே வீட்டபோயிற்றன். தங்கச்சிய அனுப்பி வெறும் பேணிய எடுத்துக்கம்மா' என்று நடையிலேயே பதில் சொல்லிக் கொண்டு தெருப்படலையைத் தாண்டி மண் ஒழுங்கையில் இறங்கித் தோளிலுள்ள கா ஆட, ஆட விசுக்கு விசுக்கென்று நடந்தான் நாகேந்திரம்.

இவைகளையெல்லாம் பல்தேய்த்துக் கொண்டிருந்த தாமோதரம் தன் தாய் மீண்டும் அடுக்களைக்குள் வந்ததும் முகத்தை கழுவிக் கொண்டு அடுக்களைக்குள் நுழைந்தான். குத்தியில் அமர்ந்து கொண்ட தாமோதரத்திற்குத் தெய்வானை சுடச்சுடத் தேநீர் கொடுத்தாள். அதைக் கொஞ்சங் கொஞ்சமாகச் சுவைத்துக் கொண்டே 'அம்மா அண்ணனைப் பார்த்தாப் பரிதாபமாக இருக்கு. விடியற் காலையிலே காவுதடியைச் சுமந்து போறான். திருக்கிணாமலை வெயில் எல்லாந்திரிஞ்சி பொழுது படத்தான் வீட்டுக்கு வாறான்'.

"யார நோகிறது? இந்தக் கறுமத்த அவன் தான் தேடிக் கொண்டான். முளைக்க முன்னம் அவனுக்குக் கல்யாணம் இந்த ஆனி பொறந்தாத்தான் அவனுக்கு இருபத்தொரு வயசு முடியும். ஆனி மாதத்தில் அவன் பிறந்ததாலை அந்த வருடம் தம்பலகாமக் கோணேசர் திருவிழாவுக்குக் கூட நான் போகல்ல'

'ஆனா அப்பா சண்டை பிடிச்சாலும், நீயும்தானே அம்மா கல்யாணத்துக்குச் சம்மதிச்சா'

என்ன செய்றது? குமர்ப்பழியைத் தேடிக் கொள்ளக் கூடாது என்றுதான் சம்மதிச்சன். செம்பர்ர பெட்டை வடிவான பெட்டைதான். பயல் பூந்து கொண்டு அங்கேயே இருந்திற்றான். அதுகளும் இதுதான் தாயம் எண்டு பூதாக்கலத்தில சோறு போட்டிற்றுகள். இனி என்ன செய்வது என்று நானும் சம்மதிச்சன். அந்த நாய்க்குக் கோணா மலையப்பா தம்பலகாமத்தில் கல்யாணம் பேசினார். அங்கின முடிச்சிருந்தான் என்டா ரெண்டேக்கர் நீர்ப்பாய்ச்சல் காணியாவது கிடைச்சிருக்கும். இஞ்ச போன இடத்தில ஒரு மண்ணாங்கட்டியும் இல்ல. அதனால காத்தடியச் சுமக்கிறான். இது அவன்ர தலவிதி!"

ஆத்திரத்துடனும் ஆற்றாமையுடனும் அனுதாபத்தோடும் பேசி முடித்த தெய்வானை தன் மகளைக் கூப்பிட்டு இரண்டு முட்டைகளைக் கொடுத்து, இதைக்கொண்டேய் ஆத்தைக்கிட்டக் கொடுத்திற்று வாம்மா. அவ அண்ணாக்கு அப்பம் அனுப்புறன் என்று சொன்னவ. கொடுத்திற்று வரக்குள்ள பெரியண்ணாட்டப் போய் வெறும் பேணியையும் எடுத்திற்று வா' என்றாள்.

இலட்சுமி முட்டைகளை வாங்கிக் கொண்டு ஓடினாள். தாமோதரம் மண்டபத்துட்சென்று தலைவாரி முகப்பூச்சையும் பூசிக்கொண்டு தெருவுக்கு வந்தான்.

– தொடரும் ....

*"மனிதனை ஆள்வது சட்டம்; சட்டத்தை ஆள்வது வாதம்"* ***- தோமஸ் புல்லர்***

*"ஒருபோதும் போராடாமல் இருப்பதை விட போராடித் தோற்பதே மேல்"*

***- ஆல்தர்க்லௌ***

*"நல்ல புத்தகம் இல்லாத வீடும், ஜன்னல் இல்லாத வீடும் ஒன்றே"* ***- சிக்சௌ***



# தை மகளே வருக!

– கலைக்கோட்டன் அ. இருதயநாதன்

தை மகளே வருக வருக வென்றேன்
ஆனால்
கரமது கூப்பி உமை
வரவேற்க முடியவில்லையே
ஏன் தெரியுமா!
கொவிட்டுக்கு போட்ட ஊசியால்
கைகளில் தெம்பு இல்லை!

அது போகட்டும்
புது பானையில்
பொங்கலிட வில்லை
ஏன் தெரியுமா!
பானையும் விலை!

ஏதோ ஒரு வகை
அரிசியை கழுவினோம்
கழுவிய களனி நீரோ
சீனாவை நோக்கியே செல்கின்றதே!
சீனிப் பாகும் சிலிர்த்தபடியாச்சு
சர்க்கரையும் பிளம்ஸ்சும்
தன்னிலை இழந்தே விட்டனவே!

கரும்பைத் தேடினேன்
காட்டு யானைகள் சுவைத்துவிட்டன!
களுதாவளை வெற்றிலையே
கழுத்து நெரித்த விலையாச்சு!
காலி பாக் கெல்லாம்
வேரோடிய விலையாச்சு.

என்ன செய்வேன்!
அடுப்புக் கல்லை தேடினேன்
அது மாத்திரம்
சுயநினைவை இழக்காதிருந்தது!
மூன்று கற்களுமே
ஒற்றுமையாக இருந்தன
மூன்று மூன்று ஆம்
மூவொரு கடவுளே
உங்களின் ஒற்றுமை – தை நாளிலே
எமது மூவினத்திலும்
நிலைக்கட்டும்!



## அன்புள்ள மகனுக்கு...

உன்னிடத்தில் நல்லவர்களாக நடந்து கொள்ளாதவரிடம் நீ உன் வன்மத்தை / பொல்லாங்கை காட்டாதே.
உன் அம்மாவையும் என்னையும் தவிர உன்னை நல்லவிதமாக நடத்தி செல்லும் பொறுப்பு எவருக்குமில்லை. உனக்கு யாராவது நல்லவர்களாக இருப்பின் அது உனக்கு கிடைத்த புதையல் / பொக்கிஷம் போன்றதாகும். அவர்களுக்கு நீ நன்றி உடையவனாக இரு. மேலும் நீ அவர்களிடத்தில் கவனமாக நடந்து கொள்ளுதல் அவசியம். ஏன் எனில், ஒவ்வொருவரின் அணுகுமுறையும் ஏதேனும் ஒரு நோக்கத்துடனேயே இருக்கிறது. உன்னிடத்தில் ஒரு மனிதன் நல்லவனாக நடந்து கொள்கிறான் என்றால், உன்னை அவன் உண்மையாக நேசிக்கிறான் என்று அர்த்தம் இல்லை. நீ விழிப்புடன் இருக்க வேண்டும். அவனை நீ ஆய்ந்தறியாமல், மதிப்பிடாமல் உண்மையான் நண்பன் என்று கொள்ளாதே.

■ ■ ■ படித்ததில் பிடித்தது....



# முயற்சி என்பது தொடர்கதை ....
## தோல்வி என்பது சிறுகதை

■ ஜே. எச். இரத்தினராஜா

**வே**கமாய் மலை முகடுகளில் ஏறிக்கொண்டிருந்தனர் அந்த இளைஞர்கள். அடிவாரத்தில் இருக்கும் கிராமத்தில் வசிக்கும் அவர்கள் முகத்தில் கோபமும் வன்மமும் கொப்பளித்துக் கொண்டிருந்தது. அதைவிட ஆயாசமும், சோர்வும். தங்கள் கிராமத்திலிருந்த நான்கு வயதுக் குழந்தையொன்றினை மலை மேலுள்ள கிராமத்தினர் கடத்தி விட்டதால் இவர்கள் மீட்கப் புறப்பட்டிருந்தார்கள்.

மலையேறுவது இவ்வளவு கடினமான விஷயம் என்று அவர்கள் கருதியிருக்கவில்லை. மூச்சு வாங்க வாங்க மலையின் மேல் ஏறிக் கொண்டிருந்த போது, தூரத்தொலைவில் ஒரு பெண்ணுருவம் தெரிந்தது. இன்னும் நெருங்க நெருங்க அந்தப் பெண்ணின் கைகளில் ஒரு குழந்தை இருப்பதும் புரிந்தது. நன்றாகப் பார்த்தால், காணாமல்போன குழந்தை அது. மீட்டு வருவதோ அந்தக் குழந்தையின் தாய்.

வியப்புடன் அந்தப் பெண்ணை இளைஞர்கள் சூழ்ந்து கொண்டனர். ஒருவர் கேட்டார் "ஏறவே சிரமமான இந்த மலையில் நாங்களே தடுமாறுகிறோம். நீ எப்போது, எப்படி ஏறினாய்". குழந்தையின் அன்னை கூறினாள், "அண்ணா, காணாமல் போனது என் குழந்தை". பொட்டில் அறைந்தது போலிருந்தது அந்த இளைஞர்களுக்கு.

இன்னொருவர் குழந்தையைக் காப்பாற்றப் போனதால், அந்த இளைஞர்களுக்கு தூரம் தெரிந்தது; வலியும் தெரிந்தது. தன்னுடைய குழந்தையை மீட்கப் போனதால், அந்த பலவீனமான பெண்ணுக்கு மலை, மலையாகவே தெரியவில்லை.

மலைபோல் பெரியது எதை நாம் எதிர்கொண்டாலும், அதைத் தீர்ப்பதில் நமக்கு எவ்வளவு வேகமும், விருப்பமும் இருக்கிறது என்பதைப் பொறுத்தே அதை வெற்றி காண முடியும். பெரிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கை தேர்ந்தவர்கள் என்று சிலர் இருப்பார்கள். அவர்கள், ஆயிரம் பிரச்சினைகளை அநாயசமாக கையாள்வது எப்படி தெரியுமா? ஒவ்வொரு பிரச்சினையையும், புதிதாகப் பார்ப்பதன் மூலம்தான். "இதென்ன பெரிய விஷயம்" என்று அலட்சியமும், அலட்டலுமாய் எதிர்கொண்டால், எதிர்பாராத நேரத்தில் அந்த அலட்சியமே நம்மை சறுக்கி விழச் செய்யும்.

இது புதிய பிரச்சினை என்ற விழிப்புணர்வுடன் அதனை அலசி ஆராய்ந்தால், புதிய வழிமுறைகள் கிடைக்கும். புதிய தீர்வுகளும் பிறக்கும். இதுகூட ஒரு மலையேற்றம் மாதிரித்தான். மலையில் ஏறுகிறபோது, நீங்கள் கடந்து வந்த தூரத்தைப் போலவே, கடக்கப் போகிற தூரமும் முக்கியம். எத்தனை தூரம் கடந்து வந்திருந்தாலும், எடுத்து வைக்கப்போகிற அடிகள்தான் இலக்கைக் கடக்க உதவப் போகின்றன. ஐம்பது மைல் தூரமுள்ள மலையைத் தாண்டுகிறீர்கள் என்றால், இருபது மைல் தூரத்தை இரண்டு மணி நேரத்தில் ஏறிவிட்டீர்கள் என்பது மட்டும் சாதனையாகாது. மீதமுள்ள முப்பது மைல் தூரத்தைத் தாண்டும் சக்தி இருக்கிறதா என்பதே உங்கள் சாதனையின் அளவுகோல் ஆகும். மலர்ச்சியுடன் தொடங்குவது, மனவலிமை குன்றுவது, பாதியில் திணறுவது என்று பலவீனமான உள்ளம் இருந்தால் சின்னப் பயணம்கூட சிரமமாகத்தான் இருக்கும்.

புகழ் வாய்ந்த மலையேற்ற நிபுணர் ரெய்ன் ஹோல்ட் டெஸ்னர் இருபது வயதிலிருந்து சிகரங்

களைத் தொடுவதில் சிறுத்தை. வேகம் காட்டுபவர். ஆக்சிஜன் சிலிண்டரின் உதவியில்லாமல் பல்லாயிரம் அடிகளைப் பாய்ந்து கடப்பதில் புகழ் பெற்றவர் இவர். "மலைகளின் முகடுகளைக் கடப்பதுபற்றி நான் மூளையால் சிந்திக்கவில்லை– கால்களால் சிந்தித்தேன்" என்றார். கால்களால் சிந்திப்பது என்றால், உடனே காரியத்தில் இறங்குவது என்று பொருள். ஒரு காரியத்தை நடைமுறைப் படுத்த உடனடியாக முடிவெடுக்கும்போது மகத்தான சக்தி நம்மில் நிறைகிறது.

பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நேரடியாக ஈடுபடுவதில் சாதகங்களும் உண்டு; பாதகங்களும் உண்டு. பாதகங்களை நினைத்துப் பயப்படுபவர்கள், உண்மையில் பிரச்சினையைத் தீர்ப்பதில் கவனம் செலுத்துவதில்லை. நம்மைப்பற்றி என்ன நினைப்பார்களோ என்று தயக்கம் காட்டுபவர்கள். அதன் காரணமாகவே தீர்வு நோக்கி நகராமல், பிரச்சினையை உள்ளுக்குள்ளேயே ஊறப்போட்டு, ஆனவரைக்கும் ஆறப்போட்டு நெருக்கடி முற்றிய பின்னால் நிமிர்ந்து பார்ப்பார்கள். மாறாக, பிரச்சினையைத் தீர்ப்பதே முக்கியம் என்று முதலடி எடுத்து வைத்துவிட்டால் மலையைப் பார்த்து மலைத்து நிற்க வேணடியிராது.

பல தொழிலதிபர்கள் இப்படி கணப்பொழுதும் தாமதிக்காமல் களத்தில் இறங்கி, தங்களுக்குத் தடையாய் இருந்த மலைகளை விழுங்கியதால், 'மலைவிழுங்கி மகா தேவர்களாக' விளங்குகிறார்கள். அவர்களைக் கேட்டால், "நேரடியாக களத்தில் இறங்குவதால் நம்முடைய பலம் நமக்கே முதலில் தெரிகிறது" என்கிறார்கள். உண்மைதான். ஒரு சிக்கலைத் தீர்க்கிறபோது, அதன் உச்சம் தொடுகிற சூழ்நிலை ஒவ்வொருவருக்கும் உருவாகும். மலையுச்சியை நெருங்குகிறபோது, பிராணவாயு போதாத போது, பனி மழையின் குளிர் தாங்காத போது, மலையேறும் வீரர்கள் தங்கள் யுத்தத்தின் நடுக்கமான கணங்களில் நிற்பார்கள். ஓட முடியாதவர்கள் நடந்தாவது இலக்கினைத் தொடுவார்கள். அப்போதும் அவர்கள் "கால்களால்தான்" சிந்திப்பார்கள்.

போராட்டத்தின் உச்சிப் பொழுதில், நம் மனோ சக்தியை நாமே மறுபரிசீலனை செய்வதெல்லாம் முடியாத காரியம். எப்படியாயினும், இலக்கைத் தொடுவது என்கிற ஒற்றைச் சிந்தனை நோக்கி உடல், உள்ளம், உயிர் எல்லாம் குவிகிற போது அந்த முயற்சி வெற்றியடைகிறது. கடைசி நேரப் பின் வாங்குதல் நம்மை பிரச்சினையிலும் நிறுத்தாமல், தீர்விலும் பொருத்தாமல் நடுவே நிறுத்தி விடுகிறது. அது திரிசங்கு சொர்க்கமல்ல. திரிசங்கு நரகம் செய்துமுடி அல்லது செத்துமடி என்ற தீவிரத்துடன் மோதுபவர்கள், செய்து முடித்திருக்கிறார்கள்.

---

*"உங்களுக்கு தோல்வி கிட்டும்போது ஏமாற்றம் ஏற்படலாம். ஆனால், நீங்கள் முயற்சி செய்யாவிட்டால் உங்களுக்கு பெரிய அழிவே ஏற்பட்டுவிடும்"* - **பெவரி ஸில்ஸ்**

---

வெளியே இருக்கும் மலைபோன்ற பிரச்சினைகளுக்கு மட்டுமல்ல, மனிதனின் மனதுக்குள் நடக்கிற போராட்டங்களுக்கும் இது பொருந்தும். உணர்ச்சிக்கும் அறிவுக்கும் நடக்கிற போராட்டம் சபலத்துக்கும், சங்கல்பத்துக்கும் நடக்கிற போராட்டம் என்று, எல்லாவற்றையும் இதே தீவிரத்துடன்தான் மேற்கொள்ள வேண்டும்.

தன்னோடு நடந்த போராட்டத்தில் தன்னையே பணயம் வைத்தவர்களின் பயணங்கள் வெற்றிப் பயணங்கள் ஆகியிருக்கின்றன. "மோகத்தைக் கொன்றுவிடு, அல்லால் எந்தன் மூச்சை நிறுத்தி விடு. தேகத்தைச் சாய்த்து விடு, அல்லால் அதில் சிந்தனை மாய்த்து விடு" என்று மகாகவி பாரதி முன்மொழிவதும் இதைத்தான்.

சாதக பாதகங்கள் என்று யோசித்து சிலர் தயங்கி நிற்கிறார்கள் என்பதாகப் பார்த்தோம். இதில் இருக்கிற ஒரே பாதகம், தோல்வி பற்றிய பயம்தான். உண்மையில் முயற்சி என்பது தொடர்கதையானால், தோல்வி என்பது சிறுகதைதான்.

தவறுகளைத் திருத்திக்கொண்டு மீண்டும் சிலர் முயன்றிருக்கிறார்கள். பலரோ தோல்வி தந்த அதிர்ச்சியிலும், அவமானத்திலும் துவண்டு போய் விழுந்திருக்கிறார்கள். தோல்வியால் விழுந்தவர்கள் எவருமில்லை. தோல்வி தந்த அவமானத்தால் தங்கள் மீது தாங்களே அவநம்பிக்கையடைந்து, அதனால் விழுந்தவர்கள்தான் அதிகம். இரண்டில் ஒன்று பார்ப்பவர்கள் சாமர்த்தியசாலிகள். இரண்டையுமே பார்த்துத் தயங்குபவர்கள் குழப்பவாதிகள்.

*நீங்கள் சாமர்த்தியசாலியா? குழப்பவாதியா? மலர்ந்துள்ள இப்புதிய வருடத்திலாவது சிந்தியுங்கள், செயற்படுங்கள்.* ■■■



# பன்னாட்டு பழமொழிகளில் கடவுள்

– ந. பார்த்தீபன் –
ஓய்வுநிலை உப பீடாதிபதி
வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி.

சென்ற இதழ் தொடர்ச்சி.....



இஸ்ரேல் நாட்டு பழமொழி "தாயை அழ விடுவதில் மனிதர்கள் கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால் ஆண்டவன் அவளுடைய கண்ணீரை எண்ணிப் பார்க்கிறான்" என்று கூறுகிறது. இது ஆண்டவன் அந்த எண்ணிக்கைக்கேற்ப தண்டிப்பான் என எண்ண வைக்கிறது. "தாய் உன்னை சுமந்து பால் கொடுத்து சீராட்டி வளர்த்தவள். உனக்கு எல்லாம் அவள்தான். அவள் உன்னைப் பற்றி ஆண்ட வனிடம் முறையிடும்படி நடந்து விடாதே" என்று கூறுகிறது எகிப்து நாட்டுப் பழமொழி. ஏன் "தெய்வம் நின்று கொல்லும்" என்பதையும் நாம் மறக்கக்கூடாது.

"கண்ணைக் கெடுத்த தெய்வம் மதியைக் கொடுத்தது" என்றொரு பழமொழி தமிழ்நாட்டில் கூறப்படுகிறது. மதியைக் கொடுத்து, எது சரி? எது பிழை? என்று அறிவுபூர்வமாக சிந்திக்கவும் செயற்படவும் வாய்ப்பு கிடைக்கிறது என்பதை சிந்திக்கவேண்டியது நாமல்லவா..?.

"தெய்வம் காட்டுமே தவிர ஊட்டாது" என தமிழ்நாட்டுப் பழமொழி குறிப்பிடுகிறது. டென்மார்க் நாட்டுப் பழமொழி, "கடவுள் ஒவ்வொரு பறவைக்கும் உணவளிக்கிறார். ஆனால் அதை அவர் கூட்டிற்குள் வீசுவதில்லை" என்கி றது. முயற்சி, உழைப்பு என்பன மனிதனிடம் இருக்கவேண்டும். எல்லாம் அவன் செயலென்று சோம்பேறித்தனமாக இருக்கக் கூடாது. ஆபிரிக்க நாட்டுப் பழமொழி இதனை அழகாக சொல்லியுள்ளது. "உன்னால் முடிந்ததை எல்லாம் செய்துவிட்டு இறைவனிடம் உதவி கேள்". "கடவுளின் அரவை இயந்திரத்தில் துக்கங்கள் எல்லாம் அரைபடுகின்றன" என நம்பிக்கையூட்டுகிறது ஆப்கானிஸ்தான் நாட்டுப் பழமொழி. "அன்னையும் பிதாவும் அன்பாக உள்ளனர். ஆனால் ஆண்டவன் அவர்களையும் விட அன்பாக இருக்கிறார" என்கிறது டென்மார்க் நாட்டுப் பழமொழி. அதனால்தான் மணிவாசகர் "தாயிற் சிறந்த தயாவான தத்துவனே..." என்று பாடினார். கடவுள் நம்பிக்கை, தெய்வ பயம், இறைசிந்தனை என்பன அருகிப் போகின்றன. அனுப்பப்பட்டவர்களின் பழமொழிகள் எங்களை ஆலோசிக்க வைக்கின்றன.

சுவீடன் நாட்டுப் பழமொழி, "ஒவ்வொருவரு டைய உள்ளத்திலும் ஓர் ஆலயம் இருந்துகொண்டு இருக்கிறது. ஆனால் அதில் உபதேசம் செய்வது கடவுள் அல்ல" என்று கூறியிருப்பது சிந்திக்க வேண்டியது. உன்னுடைய உள்ளத்தில் இருக்கும் ஆலயத்தில் நீதான் உபதேசி. உன் சொல், செயல், சிந்தனை யாவும் உன்னால் தீர்மானிக்கப்படு கின்றன என்ற எண்ணத்தை மேற்கூறிய பழமொழி ஊட்டுகிறதல்லவா? இந்நிலையில் "உலகத்துக்கு வெட்கப்படாதவன் கடவுளுக்கும் பயப்படமாட் டான்" என்பது சுவிற்சலாந்து நாட்டுப் பழமொழி. "அச்சமே அரசர்க்கும் ஆண்டவனுக்கும் செலுத்தும் அன்பாகும்" என்கிறது செக்கோஸ்லோவாக்கிய நாட்டுப் பழமொழி... இங்கே பயமா? பக்தியா? என்ற வினா எழுகின்றது. பயம் என்பதை அன்பாக மாற்றுங்கள். பக்தி நெறி என்பது அன்புநெறி தானே. தலைவனுக்கும் கடவுளுக்கும் பயப்படுவது என்பது அன்பாக மாற்றப்படுகிறது. இதனையே பலஸ்தீன நாட்டுப் பழமொழி "கடவுளுக்கு அஞ்சு, கட்டளையைக் கடைப்பிடி. கடவுளே நமக்கு சரண். கடவுளே நமக்கு பலம். கடவுள் பயம் தான் ஞானத்தின் ஆரம்பம்" என்கிறது. இந்தக்

“கடவுளுக்கு அஞ்சு” என்பதை அடுத்து “அடுத்தபடி கடவுளுக்கு அஞ்சாதவனைக் கண்டு அஞ்சு” என்கிறது போலந்து நாட்டுப் பழமொழி. ஏனெனில் கடவுளுக்கு பயப்படாதவன் எதையும் செய்வான். எனவே “நீ கடவுளுக்கு அஞ்சு அடுத்தபடி கடவுளுக்கு அஞ்சாதவனைக் கண்டு அஞ்சு” என்கிறது. “இறைவனிடம் கையேந்துங்கள் அவன் இல்லையென்று சொல்லுவதில்லை...” என்கிறது ஓர் இஸ்லாமிய பக்தி பாடல். ஸ்கொட்லாந்து நாட்டுப் பழமொழி கடவுளினது செயற்பாட்டினைக் குறிப்பிடுவதைப் பாருங்கள் “மனிதன் ஆகாயத்தில் இருந்து குண்டு வீசுகிறான். கடவுள் அவனைக் குளிர்விக்க மழைத் தண்ணீரை பொழிகின்றார்” என்கிறது. மனிதன் குண்டுகளை வீசி எல்லாவற்றையும் அளிக்க விரும்பும் குணம் கொண்டவனாக இருக்க கடவுள் எல்லோரையும் வாழவைக்கும் கைங்கரியமான மழையைத் தருகிறார். மனிதன் மாறிவிட்டான். இதனை மனிதநேயம் கொண்டவர்கள் மனதில் கொள்ள வேண்டும். பாரசீக நாட்டுப் பழமொழி “ஒவ்வொரு வியாதிக்கும் கடவுள் ஒரு மூலிகையைப் படைத்திருக்கிறார்” என்று நம்பிக்கை ஊட்டுகிறது; இயற்கை மருத்துவத்தையும் நினைக்க வைக்கிறது. மூலிகைகளையோ இயற்கை மருத்துவத்தையோ மனிதன் மறந்து கன காலம் ஆகிவிட்டது. பக்கவிளைவுகள் இல்லாத பத்தியம் காக்கும் பக்குவத்தை மனிதன் இழந்து விட்டான். பன்னாட்டுப் பழமொழிகளும் பக்தி நெறியை பயபக்தி, இறை நம்பிக்கை என்பனவற்றை எந்த அளவுக்கு எடுத்தியம்பியுள்ளன. “கடவுளை நோக்கி ஒருவன் ஓர் அடி நடந்தால் கடவுள் அவனை நோக்கி ஓடி வருகிறார்” என்கிறது இஸ்ரேல் நாட்டுப் பழமொழி. “நல்ல மனச்சாட்சி கடவுளின் குரல்” என்கிறது எஸ்தோனியா நாட்டுப் பழமொழி. “உண்மை என்பது ஆண்டவனின் முத்திரை”, “சத்தியம் கடவுளுடைய முத்திரை” போன்ற விழுமியக் கருத்துக்களை எடுத்துரைக்கின்றது இஸ்ரேல் நாட்டுப் பழமொழி. மேலும் “ஆண்டவன் எல்லா இடத்திலும் இருக்க முடிவதில்லை” என்றும் அது கூறியுள்ளது. இப்போது தெய்வம் எங்கே என்ற வினா எழுகிறது அல்லவா? இந்நிலையில் நைஜீரிய நாட்டுப் பழமொழி “ஏழைகளுக்குக் கடன் கொடுப்பவன் கடவுளுக்கு கடன் கொடுக்கிறான் என்றும் கடவுளிடம் கேட்டால் கிடைக்காதது ஒன்றும் இல்லை என்றும் நீதிபதிகளிடமிருந்தும் வைத்தியர்களிடமிருந்தும் கடவுள் என்னைக் காப்பாற்றுவாராக என்றும் குறிப்பிடுகிறது.



## டிப்ஸ் ... டிப்ஸ் ... டிப்ஸ்...

- கருணைக்கிழங்கை வேகவைக்கும் போது சிறிதளவு வெல்லம் சேர்த்து வேக வைத்தால், வெகு சீக்கிரம் பஞ்சுபோல வெந்து விடும்.
- இட்லி மிளகாய்ப்பொடியுடன் புளி, கறிவேப்பிலை, பொரித்த அப்பளத் துண்டுகளைச் சேர்த்து அரைக்க, திடீர் சுவைமிகு துவையல் ரெடி!
- சப்பாத்தியின் மேல் சூடான பால்விட்டு, சர்க்கரை, ஏலக்காய்த்தூள் போட்டு, சிறிது நேரம் ஊற வைத்துக் கொடுத்தால் வயதானவர்களும் குழந்தைகளும் விரும்பிச் சாப்பிடுவார்கள்.
- உளுந்துவடை செய்யும்போது, ஒரு கை சாதம் சேர்த்து அரைத்து வடை தட்டினால் உள்ளே மெத்தென்றும், வெளியே மொறு மொறுப் பாகவும் இருக்கும். உருளைக்கிழங்கை வேக வைத்து தோலுரித்து மாவுடன் சேர்த்து அரைத்துத் தட்டினாலும் மொறு மொறுப்பாக இருக்கும்

**“விலங்குகள் ஒருபோதும் விளையாட்டு வேடிக்கைக்காகத் தன்னினத்தைக் கொல்வது கிடையாது. மனிதன் மாத்திரமே தன் சகாக்களின் அழிவிலும், அவலத்திலும் மகிழ்ச்சியடையும் ஒரே விலங்கு”** - ஜே.ஏ. ஃப்ரோட்

**“கலாசாரம் உடலிலும் உடையிலும் வளர்வதன்று. அது உள்ளத்தோடு ஆத்ம வளர்ச்சியைக் காட்டும் பொருள்”**
- ஜாமஜாட்மாம்

பலரும் கோர்ட்டுக்கும் (court) வோட்டுக்கும் (word) போகாமல் காப்பாற்ற வேண்டும் எனப் பிரார்த்திப்பதைப் பார்க்கிறோம்.

இறை நம்பிக்கையையும் இறை பக்தியையும் பழமொழிகள் மிகவும் ஆழமாகவும் அழுத்தமாகவும் சொல்லி வைத்துள்ளன. நாங்கள் பலருடைய பட்டறிவும் சிலருடைய பகுத்தறிவும் இணைந்து வந்த ஒரு வரிக் கவிதையான உயிர்மொழியாம் பழமொழியைச், சிறப்பாக வந்து மயிலிறகால் வருடிச்செல்லும் சுகமொழியை பயன்படுத்தும் ஆற்றலைப் பெறவேண்டும். ■■■

# இலக்கிய மஞ்சரி

## "தாய் மொழியும் நமது நிலையும்"

- மு. வரதராசனார்



- ஆழியோன்

**மு.வ.** என்ற ஈரெழுத்துகளால் அறியப்பட்ட வர் பேராசிரியர் கலாநிதி. மு. வரதராசனார் அவர்கள். 1912ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ம் திகதி பிறந்தார். 1974ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10ம் திகதி மரணமடைந்தார். தமது அறுபத்தி யிரண்டு ஆண்டு வாழ்வில் 85 நூல்களை எழுதிய பெருமகனார்.

"தமிழரின் குழந்தைகள் தமிழ்ப் பெயர் பெறுதல் வேண்டும்" என்ற பாரதிதாசனின் எண்ணக்கருவை செயற்படுத்திக் காட்டியவர். மு.வ. அவர்கள். பேராசிரியர் அவர்கள் அரசியல் இயக்கச் சார்புடையவர் அல்லர். ஆனாலும் அரசியலாளர்கள் வெளியிடும் இதழ்களில் தனது ஆக்கங்களை வழங்கியுள்ளார். எழுத்தைத் தவமா கக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளார்.

ஆய்வாளர்கள் படைப்பாளர்களாக இருப்பதில்லை; படைப்பாளர்கள் ஆய்வா ளர்களாக இருப்பதும் குறைவு. ஆனால் பேராசிரியர் மு.வ. அவர்கள் ஆய்வாள ராகவும், படைப்பாளராகவும் விளங்கிய அருமையாளர்.



மு.வ.

மு.வ. அவர்கள் 1937 யூலையில் "நவசக்தி" என்னும் பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் மூவகை அபிமானங்கள் பற்றி எழுதியுள்ளார். அக்கட்டுரையின் தலைப்பு "தாய்மொழியும் நமது நிலையும்".

நல்வழியில் வாழ்ந்து முன்னேற ஒவ்வொரு வருக்கும் மூவகை அபிமானம் இன்றியமையாது இருத்தல் வேண்டும் என்று அவர் குறிப்பிடுகின்றார். அவையாவன, தத்தம் முன்னோரை மதிக்கும் அபிமானம்: தாய்நாட்டைப் பற்றிய அபிமானம்: தாய்மொழியைப் பற்றிய அபிமானம்.

முன்னோரை மதித்தல் என்பதில், முன்னோர்கள் நமக்காக இயற்றிய உயரிய நூல்களைப் போற்ற வேண்டும்; அதைப்படிப்பதன் மூலம் அவர்களின் விழுமிய கருத்துகளை நன்கு உணர வேண்டும்" என்று கூறுகின்றார்.

ஜப்பானிய அறிவியல் மேதை 'சையதோ' என்பவர் ஒரு கதையொன்றைக் கூறினார். "ஜப்பானிய வாலிபன் ஒருவன் தான் கிறிஸ்தவ னாக விரும்புவதாக தன் தாய்க்கு ஒரு கடிதம் எழுதினான்; அதற்குத் தாய் பதிலளிக்கையில், "உன் முன்னோரைத் தவறாமல் மதித்து ஒழுகுவா யானால் நீ மதம் மாறுவதில் எனக்கு ஆட்சேப னையில்லை" என்று அனுமதித்தாள். ஜப்பானியர் பெற்றுள்ள சிறப்பிற்கு இதுவும் ஒரு காரணம்" என்று அவர் குறிப்பிட்டார்.

தாய்நாட்டு அபிமானம் பற்றி குறிப்பிடுகையில், தாய்நாட்டு அபிமானம் என்பது தேச பக்தியாகும். தேச நன்மைக்காக உண்மை வழியில் தொண்டு செய்ய புகுந்தோரிடம் வேற்றுமையுணர்ச்சி ஏது? குறுகிய பக்கம் ஏது? ஒற்றுமையுணர்ச்சியும் பரந்த நோக்கமும் அல்லவா காணப்படும்?

தாய்மொழி அபிமானம் பற்றி மு.வ. குறிப்பிடுகையில் ஆங்கில கவிஞர் 'பைரன்' அவர்களின் ஒரு கூற்றை அவர் சுட்டிக்காட்டுகின்றார். "எவனுக்கு தாய்மொழியில் அன்பில்லையோ அவ னுக்கு தாய் நாட்டிடமும் அன்பில்லை".

முன்னோரிடம் பக்தி கொள்ளவும், தேசத்தில் பக்தியாக இருக்கவும் உறுதுணையாக இருப்பது தாய்மொழி அபிமானமே! முன்னோரின் விழுமிய கருத்துகளை வேறு எம் மொழியால் உணரக்கூடும்? தேசமக்களுடன் உணர்ந்து அவர்களுடன் பழகி தொண்டாற்ற தாய்மொழியா பிறமொழியா கருவி யாக இருக்கும்?

காந்தியடிகள் குஜராத்தியில் பாடும் பாடல்க ளைக் கேட்டு அல்லவா மனமுருகுகின்றார்! கீதாஞ்சலியை முதன் முதல் வங்காளி மொழி யில் அல்லவா எழுதினார். எனவே தாய்மொழிய பிமானம் மிக மிக இன்றியமையாதது என்க!

---

**தனக்கு உணவு தேடுவது உலகியல் கண்ணோட்டம். அடுத்தவர்க்கு உணவு தேடுவது ஆன்மிக கண்ணோட்டம்.**

---



# தேங்காய் எண்ணெய்

## ஒயில் புள்ளிங் ...

தேங்காய் எண்ணெய் என்றாலே அதில் பல ஆரோக்கிய நன்மைகள் நிறைந்துள்ளன. இதனைக் கொண்டு தினமும் வாய் கொப்பளிப்பதில் உடலுக்கு பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன. தொண்டை புண் அல்லது தொண்டை வலி இருக்கும் போது ஒயில் புல்லிங் செய்தால் உடனடி நிவாரணம் பெறலாம். ஒயில் புல்லிங் என்பது ஒரு பழங்கால முறை என்பதால் எண்ணெய் பயன்படுத்தி வாய் கொப்பளிக்கும்போது வாய் பகுதி சுத்தமாகிறது.


**நன்மைகள்:**

- தினமும் வெறும் வயிற்றில் ஆயில் புல்லிங் செய்வதால் சுவாசம், உணவுக்குழல் பகுதியில் தோன்றும் தொற்று குறையும். இது செரிமானத்தில் இருந்து நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது வரை ஒட்டுமொத்த ஆரோக்கிய மேம்பாட்டிற்கும் உதவுகிறது.

- தேங்காய் எண்ணெயில் ஏராளமான அத்தியாவசிய வைட்டமின்கள் மற்றும் கொழுப்புகள் உள்ளன. குறிப்பாக பாலிஅன்சாச்சுரேட்டட் கொழுப்பு அமிலங்கள், பாலிபினால்கள், வைட்டமின் ஈ, அமிலங்கள் மற்றும் தாதுக்கள் நிறைந்துள்ளது.

- தேங்காய் எண்ணெய் பற்களுக்கு மிகவும் நன்மை பயக்கும். தினமும் ஆயில் புல்லிங் செய்வதால் பற்களுக்கு இடையில் உள்ள தொற்றுகள் நீங்குகிறது மற்றும் உங்கள் பற்கள் ஆரோக்கியமாகவும், வெண்மையாகவும் வைத்திருக்க உதவுகிறது.

- பொதுவாகவே தேங்காய் எண்ணெய் வீக்கத்தைக் குறைக்கும் தன்மையை பெற்றுள்ளது. தேங்காய் எண்ணெய்யை கொண்டு ஆயில் புல்லிங் செய்வதால் வாயில் உள்ள வீக்கத்தைக் குறைத்து ஈறுகளின் ஆரோக்கியம் மேம்படுத்தும்.



*"உயிர் இருக்கும்போது எதையும் கொடுக்காமல், இறந்த பிறகு தர்மங்கள் செய்ய ஏற்பாடு செய்வது வடிகட்டிய சுயநலமாகும்"*

**– கோல்ட்டன்**

*"ஏழையின் முகம் மலரும்போது இறைவனின் உள்ளமும் மலர்ச்சி கொள்கிறது"*

**– மாப்பஸான்**

## வினா விடைப் போட்டி - இல 33

**சரியான விடைகள்**

1. புனித 2ம் ஜோன் பவுல்
2. 2000ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ம் திகதி
3. "கொஞ்ச இரக்கம் இந்த உலகை இன்னும் நேசமிக்கதாகவும் இன்னும் நேர்மை மிக்கதாகவும் மாற்றக் கூடியது.
4. "நம் பாத விரல்களிலும் நகத்தினுள்ளும் இருக்கும் கண்ணுக்குத் தெரியாத அழுக்குகள், கிருமிகளை அழிக்க உதவும். இதை வாரம் 3 முறை செய்வதால் உடலில் கால் பகுதியில் உள்ள சூடு நீங்கி விடும். பாத வலி, கணுக்கால் வலி, மூட்டுவலி என்பன படிப்படியாக குறையும்.
5. ▪ யாயீரின் மகளுக்கு உயிர் தந்தார் (மாற் 5:41)
   ▪ நயீன் பட்டணத்து விதவையின் மகனுக்கு வாழ்வு கொடுத்தார் (லூக் 7:14)
   ▪ இறந்து நான்கு நாட்கள்கழித்து இலாசரை உயிர்ப்பித்தார் (யோவா 11:43)
6. ▪ வெப்பநிலை உயர்வு ▪ காடுகளில் பரப்பளவு குறைதல்
   ▪ பருவநிலை மாற்றம் ▪ மணல் கொள்ளை
7. "அருள்மிக பெற்றவரே வாழ்க் ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் (லூக் 1:28)
8. ▪ மரியா இறைவனின் தாய் (தை 1)
   ▪ மரியா அமல உற்பவி (மார்கழி - 08)
   ▪ மரியாவின் விண்ணேற்பு (ஆவணி - 15)
9. ஜப்பான் நாட்டில் டோக்கியோ நகரில்
10. குளிக்கும்போது குளிக்கும் தண்ணீரில் ஒரே ஒரு தக்காளி பழத்தின் சாற்றினை கலந்து குளித்து வந்தால் உடல் துர்நாற்றம் போகும்.

***சரியான விடைகள் எழுதி 500/= பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:***

- **R. பத்மாமேரி,**
  இல. 133, அம்மன் கோவில் வீதி,
  கல்முனை - 01.
- **D. கியூரின்,**
  பொத்துவில் வீதி,
  அக்கரைப்பற்று.
- **ரா. ரொபினா,**
  பிரதான வீதி,
  ஆறுமுகத்தான் குடியிறுப்பு,
  தன்னாமுனை.

பங்குபற்றியோர் - 11 பேர்
சரியான விடை எழுதியிருந்தோர் - 04 பேர்

# மாறாதோ காலம்



**கவிதாயினி**
சுஜி பொற்செல்வி

தேடலோ தொலைவில்
நாடலோ பயத்தில்
வாழ்வதோ கடினம்
காலத்தின் துடினம்

கனவுகள் தொலைவில்
கனியுமா மனதில்
நனவுகள் நிலையில்
நலிந்திடும் மனிதம்

படர்ந்திடும் துன்பம்
தொடர்வதும் முறையோ
அடர்ந்திடும் நிலையும்
தொலைந்திடா வகையோ

விடுகதையாகிடும்
சிந்தனை அனைத்தும்
தடுத்திடும் செயற்கையின்
அழிவினைக் கண்டீர்

விடியலைத் தேடிடும்
உள்ளங்கள் அனைத்தும்
விழுந்திட வகைதனை
இறைவா தாரீர்

துவண்டிடும் மனதைத்
தேற்றிட வாரீர்
மாற்றத்தைத் தந்தே
ஏற்றத்தைக் கூறீர்

மாறாதோ காலமும்
மகிழாதோ மனங்களும்
இன்பம் நிலைத்திட
அருளாசி கிட்டாதோ

தொலைந்த நாட்களும்
மீண்டும் வாராதோ
நிலைத்திட ஏட்டினில்
பொறித்திடுவீரோ

மனிதம் மலரட்டும்
மலர்களும் மணக்கட்டும்
மாண்புகள் நிறைந்தே
நல்லொளி பிறக்கட்டும்

## டிப்ஸ் .... டிப்ஸ் ....

ரவையை நெய்விட்டுச் சிவக்க வறுத்து. காய்ச்சிய பாலில் ஊறவைத்து. பிறகு சீனியை பாகு செய்து கேசரி கிளறினால் சுவை இரட்டிப் பாகும்.



பூரிக்கு மாவு பிசையும்போது ஒரு தேக்கரண்டி கடலை மாவு சேர்த்துப் பிசைந்தால் நல்ல நிறத்துடன் பூரி சுருங்காமல் வரும்.




# ஞான உபதேசம்!

**கடுகுக் கதை 116**

அன்ரனுடன் வேலை செய்து ஓய்வுபெற்ற சிற்றூழியர் சிவகரன் மாரடைப்பால் காலஞ் சென்றுவிட்டார் என்ற செய்தி அன்ரனின் குடும்பத்தாரையே உலுக்கிவிட்டிருந்தது. அஞ்சலி 'பெனர்' ஒன்றையும் அஞ்சலி துண்டுப் பிரசுரம் ஆயிரம் அச்சடித்துக் கொடுப்பது என்றும் அன்ரன் துயரத்துடன் முடிவு செய்தார். எல்லோரும் 'அமரர்' என்று போட்டுதான் பெனர் அடிப்பார்கள். அது அன்ரனுக்குப் பிடிப்பில்லை: திரு.சு. சிவகரன் என்றுதான் பெயரை எழுதினார். அடுத்த வருடம் என்றால் அமரர் சிவகரன் என்று குறிப்பிடலாம் என்பதுதான் அன்ரனின் வாதம்.

அன்ரனின் சின்ன மகன் தகப்பனிடம் வந்து,

"அப்போய்... பெனருக்கும் நோட்டீசுக்கும் எவ்வளவு முடியும்?" என்று கேட்டான்.

"மகன்! பத்தாயிரம் ரூபா மட்டில முடியும்..." என்றார் அன்ரன்.

"பெனர் போட்டால் அத ஒரு மாதத்துள்ள கழற்றிப் போட்டிருவாங்க .... நோட்டிச வீட்ட போகக்குள்ள வீசியெறிஞ்சுப்போட்டு போயிடுவாங்க .... காலால் மிதி படும் ..... அப்பா! என்ர உண்டியலிலும் கொஞ்சகாசு இருக்குது, அதயும் தாறன் .... உங்கட பத்தாயிரத்தையும் அதையும் போட்டு சிவாகரன் மாமா வீட்ட குடுப்பம்.... அவங்கட மகனும் என்ர வகுப்புத்தான். அவனுக்கு மிஞ்சுபோன சப்பாத்துதான் இருக்கு, கிழிஞ்ச பெனியன் தான் போட்டு வாறவன்.... அவன் போடுற 'அன்டவெயாரும் ஓட்டதான் என்று என்னிடம் சொன்னவன் .... அவன் சரியான பரிதாபம் அப்பா! ஒண்டில் காசாக குடுப்பம்.... இல்லாட்டி சப்பாத்து சாமான் வாங்கிக் குடுப்பம்..... சரியா அப்பா...?" என்று கேட்டான்.

'சிவனுக்கு உபதேசம் செய்த முருகனாய்' நின்ற தன்மகனை பெருமையுடன் பார்த்தார் அன்ரன்!

## உங்களைப் பார்க்க முடியாதே!

சென்ற நூற்றாண்டில் அமெரிக்காவில் வாழ்ந்த பேரறிஞர்களில் இங்கர்சால் மிக முக்கியமானவர் அவர் ஒரு நாத்திகர்.

பிலிப் புரூக்ஸ் என்னும் பிரபல பாதிரியார் நோய்வாய்ப்பட்டு மரணப்படுக்கையில் இருந்தபோது பலரும் அவரைக் காணச் சென்றார்கள். அவர் யாரையும் பார்க்கச் சம்மதிக்கவில்லை.

தாம் இங்கர்சாலைப் பார்க்க விரும்புவதாகவும், அதனால் அவரைக் கூட்டிவரும்படியாகவும் சொன்னார். அவர் விரும்பியபடி இங்கர்சால் அவரிடம் வந்தார்.

"தங்களுடைய நண்பர்களை எல்லாம் பார்க்கச் சம்மதிக்காமல், என்னைப் பார்க்கவரும்படி கேட்டீர்களே. அதற்கு என்ன காரணம்?" என்று இங்கர்சால் கேட்டார்.

அதற்குப் பாதிரியார் பிலிப் புரூக்ஸ் "காரணம் இதுதான், என்னுடைய நண்பர்களை நான் சொர்க்கத்தில் பார்ப்பேன் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆனால் தங்களைப் பார்ப்பது எனக்கு இதுவே கடைசித்தடவையாக இருக்கும் அல்லவா? அதனால் தான்...!" என்று அமைதியாகப் பதிலளித்தார்.

- நம்வாழ்வு -








# விசித்திரங்கள்

'குடிமகன்'

உலக அரசியலில் பல விசித்திர சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. அதில் இலங்கையும் உள்ளடக்கம். முன்னர் அரசியல் என்பது மிகவும் நாகரீகமான, கம்பீரமான, கண்ணியமான ஒரு பரப்பாக காணப்பட்டது. ஆனால் தற்போது அது, நல்ல 'சித்திரம்' போல் அல்லாமல் "விசித்திரம்" மிக்கதாக மாறிவிட்டது.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் இன் அவர்கள் டிசம்பர் 17 வெள்ளிக்கிழமையன்று வடகொரிய மக்களுக்கு ஒரு உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றார். தனது தந்தையும் வடகொரிய முன்னாள் ஜனாதிபதியுமான கிம் ஜோங் மறைந்து 11 ஆண்டு நிறைவையொட்டி 11 நாட்கள் துக்கம் அனுஷ்டிக்க வேண்டுமென்று கேட்டுள்ளார். அந்த 11 நாட்களும் மக்கள் எவரும் சிரிக்கக்கூடாது: தமது வீடுகளில் யாராவது இறந்தால் சத்தமிட்டு கதறியழக்கூடாது: என்னும் விசித்திர உத்தரவு போட்டுள்ளார். கடந்த சில மாதங்களுக்கு முன் கடும் பஞ்சத்தையடுத்து ஒருவேளை மட்டுமே உணவு உட்கொள்ள வேண்டும் என்றும் ஒரு பணிப்புரை விடுக்கப்பட்டது.

இதனை முன்னுதாரணமாகக் கொண்டுதானோ தெரியவில்லை, இலங்கையில் ஒரு இராஜாங்க அமைச்சும், மக்கள் ஒரு நேரம் சாப்பிட தயாராக இருக்க வேண்டும் என்று "அட்வைஸ்" வழங்கியுள்ளதாக பத்திரிகையொன்றில் சில வாரங்களுக்கு முன் வெளிவந்தது. கனவு கண்டு கதைக்கின்றார்களா...?

இன்னொரு விசித்திரம்: இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தில் ஓய்வுபெறும் வயதெல்லை, அரசுதுறையினருக்கு 65 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், தற்போது அவ் வயதெல்லை 62 என சுற்றறிக்கை வெளிவந்துள்ளது. கனவு கண்டு கதைக்கின்றார்களா...?

சுகாதாரத்திற்கு பொறுப்பானவர் குழுவொன்றை நியமிக்கப்போகின்றாராம். 'அசேதனப் பசளை பயன்படுத்துவதன் மூலம் மக்களுக்கு தீங்கு விளைகின்றதா?' என்று ஆராய்வதே அக்குழுவின் வேலை. இதனை செய்துவிட்டல்லவா அசேதன பசளை இறக்குமதியை நிறுத்தியிருக்க வேண்டும். இம்முறை அறுவடை அதோகதிதான். சமாளிப்பதற்காக அறிக்கைகளும், விசாரணைக் குழுக்களும் நியமித்தாலும் குழுவின் முடிவுகளும் சொல்லிக்கொடுக்கப்பட்டிருக்கும் என்று நம்பலாமா...?

சீனத்தூதுவர் வடக்கு சென்றாரல்லவா...? இலங்கையில் முதலீடுகளும் கூடுதலாக அவர்கள் வசம் சென்றுகொண்டிருக்கின்றதல்லவா...? இப்படித்தான் போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்போர் வர்த்தகம் செய்ய வந்து இலங்கையை ஆட்சி புரிந்தார்கள். இதனை ஆட்சியாளர்கள் மறந்துவிட்டார்கள்: ஆனால் மக்கள் மறக்கவில்லை. இன்னுமொரு சுதந்திரப் போராட்டங்களை நடத்த எமது சந்ததிகள் தள்ளப்படுவார்கள் போலும்.

எமது மீன்பாடும் மாநகரசபை இன்னுமொரு இன்னொரு விசித்திரம்: மாநகர சபையா? அல்லது மாநரக சபையா? என்று மண்டையைப்

போட்டுக் குழப்பிக்கொள்ள வேண்டியுள்ளது. அரசியல்வாதிகளின் குழப்பங்களால் இரண்டு விசேட ஆணையாளர்கள். தேசிய ரீதியில் விருதுகள் பெற்ற இச்சபை இன்று இழுபறியில் காணப்படுகின்றது. பாவம் வரியிறுப் பாளர்கள். அண்மையில் காலமான மாநகரசபை உறுப்பினர் ஒருவரின் உடல் அஞ்சலிக்காக சபை மண்டபத்தில் வைக்கப்பட்டபோது, ஊழியர்கள் பழிவாங்கப் படுவோம் என்ற அச்சத்தல் அஞ்சலி செலுத்த வில்லையாம்; மறைமுக தடங்கலும் ஏற்பட்டது என்றும் கேள்வி!

கிழக்கு தமிழ் மக்கள், தங்கள் சார்பில் பேசக் கூடிய சாணக்கியம் மிக்கவர் கிடைத்திருப் பதைப் பற்றி பெருமை கொள்கின்றனராம். மொழிப்புலமை, குடும்பப் பாரம்பரியம் எல்லாம் சிறப்புத்தான். "தலைவரின் இதயத்திலும், பாசறையிலும் இருந்த "மான்", வேலிபாய்ந்து சென்றது போல் இவரும் பாய்ந்துவிடக் கூடாது" என்று ஓர் அப்பு என்னிடம் சொன்னது இவ்விடத்தில் ஞாபகம் வருகின்றது.

இதேவேளை தமிழ்பேசும் முஸ்லிம் மக்களின் அரசியல் தலைமைத்துவங்களும் விசித்திரமான செயற்பாடுகளைக் காட்டுகின்றன என்பது எனது முஸ்லிம் அன்பர் ஒருவரின் கருத்து. ■ ■

## நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட அரியவகை உயிரினம்



கொலன்ன கோப்பன்கந்த பிரதேசத்தில் பொறியொன்றில் சிக்கிய நிலையில் மிகவும் அரிய வகையிலான வெள்ளை முள்ளம் பன்றியொன்று காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறான முள்ளாம்பன்றிகள் மிகவும் அரிதானவை எனவும், பொறியில் சிக்கியதனால் படுகாயமடைந்துள்ள தாகவும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் வனவிலங்கு திணைக்கள அதிகாரி விஜித பெரேரா தெரிவித்துள்ளார்.

## மியான்மாரில் கொண்டாட்டம் இல்லாத கிறிஸ்மஸ்

மியான்மாரில் இவ்வாண்டு பிப்ரவரி முதல் தேதி யன்று இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதைய டுத்து அந்நாட்டில் வன்முறைகள் தொடர்ந்து இடம் பெற்றுவரும்வேளை, இவ்வாண்டு கிறிஸ்மஸ் பெருவிழா, அமைதி, இறைவேண்டல், மற்றும், தோழமையுணர்வில் ஆடம்பரமின்றி சிறப்பிக்கப்படும் என்று அந்நாட்டு ஆயர்கள் வெளியிட்டுள்ள கிறிஸ்மஸ் செய்தி கூறுகின்றது.

அந்நாட்டில் இடம்பெற்றுவரும் உள்நாட்டுப் போரால், காடுகளுக்குச் சென்று வாழ்கின்ற மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும், கெரில்லாப் போர், வன்முறை, கொலைகள் போன்றவற்றாலும், கடும் நெருக்கடிகளை, மக்கள் தொடர்ந்து எதிர் கொண்டு வருகின்றனர் என்று ஆயர்களின் செய்தி கூறுகின்றது.

இந்நிலையால் கைவிடப்பட்டவர்கள், நோயாளி கள், ஏழைகள் போன்றவர்களோடு, மியான்மார் கத் தோலிக்கர் தோழமையுணர்விலும், இறைவேண்டலி லும், அமைதியிலும், கடவுள், மனிதராகப் பிறந்த தைச் சிறப்பிக்கும் பெருவிழாவன்று வாழ்வார்கள் என்று அக்கிறிஸ்மஸ் செய்தி உரைக்கின்றது.

இம்மாநிலங்களின் ஆலயங்களில் நிறைவேற்றப் படும் கிறிஸ்மஸ் திருப்பலி வழியாக, 'கடவுள் இம்மானுவேலராய், நம்மோடு இருக்கிறார்' என்ற ஆறுதல் உணர்வை கத்தோலிக்கரில் ஏற்படுத்த வுள்ளோம் என்று, ஆயர்கள் தங்கள் கிறிஸ்மஸ் செய்தியில் குறிப்பிட்டுள்ளனர்.


மியான்மாரில் நாட்டுக்குள்ளே புலம்பெயர்ந்துள்ள ஏறத்தாழ 2 இலட்சம் மக்களுக்கு, தேசிய காரித் தாஸ் அமைப்பும், உலகளாவிய காரித்தாஸ் நிறுவன மும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு அனுமதிக்கப்படாத நிலையில், கிறிஸ்மஸ் காலத் தில், கத்தோலிக்கர் அனைவரும் பிறரன்புச் செயல்களில் ஈடுபடுமாறும் ஆயர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.


■ *fides*

''தைரியத்தின் சிறந்த சோதனை தோல்வியில் மனம் தளராமல் இருப்பதுதான்'' ~ இங்கர்சால்

''பழக்கம் தொட்டிலில் சந்தித்து கல்லறையில்தான் விட்டுச் செல்கிறது'' ~ இங்கர்சால்

''மனிதனை அணி செய்யும் குணங்களில் முக்கியமானது தைரியம்'' ~ டேனியல்





# நலந்தரும் ஒளியாய் மலர்ந்திடுவீர்!

■ அருட்பாவலர் நிலா தமிழின்தாசன்

திருந்தலை உலகம் திருந்தலையே!
தேவசுதனுன் வருதலையே
வருந்திடும் மாந்தர் காத்துள்ளார்
வருதலைக் கண்டுளம் மிக மகிழ்வார்
சரிந்திடும் தர்மம் தழைத்தோங்க
சமத்துவம் மண்ணில் நிலைத்தோங்க
மரியன்னை மடியில் நீ தவழும்
மாபேறுணர்ந்து மண் மகிழ்ந்து துள்ளும்.

மதவெறி கொண்டவர் மக்கள் தனை
மாய்த்திடும் கொடுமைகள் தொடருப்பா!
பதைத்துமே துடித்திடப் பாக்கிஸ்த்தானில்
பாவமோர் இலக்கையர் தனை எரித்த
பாதகம் கண்டுளம் கொதிக்குதையா ....
பாரினில் நித்தமும் இப்படித்தான்
வேதனைப் பட்டுளம் துடித்தழுவோர்
விழிநீர் துடைத்திட வாருமையா!

நாட்டினில் பஞ்சம் கொடு நோய்கள்
நாளும் பொருட்களின் விலையேற்றம்
ஈட்டும் வருவாய் நாளாந்தம்
ஏற்ற உணவுண்ணப் போதாநிலை!
வாட்டும் வறுமைத் துயர் துன்பம்
வயல்வளம் செழித்திட மழை இன்பம்
நாட்டமாய் அருளிடப் பாலகனே
நலந்தரும் ஒளியாய் மலர்ந்திடுவீர்!



ஒரு காட்டிற்கு இரண்டு மரவெட்டிகள் சென்றார்கள். மாலை மீண்டும் இருவரும் கூடும்போது ஒருவரிடம் அதிக விறகும் மேலும் அவர் அதிகம் களைப்படையாமலும் இருந்தார். மற்றவருக்கோ இது மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. நம்மைப்போலதானே அவனும். அவனால் மட்டும் எப்படி இது சாத்தியமானது. ஆர்வம் தாங்காமல் அதனை அவனிடமே கேட்டுவிட்டான்! நண்பனோ அவனிடம். "இந்த விறகிற்காக நீ என்ன செய்தாய்...?" என்று கேட்டான். அதற்கு அவன். 'இடைவிடாமல் வெட்டிக் கொண்டே இருந்தேன்" என்று கூறினான். "சிறிதும் ஓய்வில்லாமலா...?". "ஆம். அதிக விறகுகள் பெறவேண்டுமே. ஆனால் நீயோ கொஞ்சமும் களைப்படையாமல் இருப்பது எப்படி...." அதற்கு நண்பன். "நான் இடையில் அடிக்கடி ஓய்வு எடுத்துக் கொள்வேன்" என்று கூறினான்.

மறுநாள் அதேபோல் ஓய்வு எடுத்து எடுத்து மரம் வெட்டினான் முதலாமவன். ஆயினும் அவனால் நண்பனின் அளவுக்கு மரம் வெட்டமுடியவில்லை. அதற்கு மறுநாள் மரம் வெட்டும்போது நண்பனை ஒளிந்திருந்து பார்க்கவேண்டும் என்று திட்டமிட்டு வீடு திரும்பினான். அதுபோல மறுநாள் மரம் வெட்ட பிரிந்து சென்றபின். அவன் நண்பனைப் பின் தொடர்நது சென்று ஒளிந்து பார்த்தான். நண்பனும் அரைமணிநேரம் மரம் வெட்டிவிட்டு ஓய்வாக அமர்ந்தான். ஆனால். அவன் ஓய்வு நேரத்தில் அவனது கோடாலியைத் தீட்டிக்கொண்டிருந்தான்.






## நலவாழ்வு என்பது ஆப்பிரிக்கக் குழந்தைகள் அனைவருக்குமுரிய உரிமை

"ஆரோக்கியமாக வளர்வது, ஆரோக்கியமாக இருப்பது ஆகியவை உலகம் முழுவதும் உள்ள குழந்தைகளுக்கான உரிமை என்பதே, Star Singers 64வது பிரச்சார அமைப்பின் குறிக்கோள் என்றும், ஆப்பிரிக்காவின் குழந்தைகளுக்குத் தடுப்பு மற்றும் மருத்துவ சிகிச்சையின் அவசியத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் இவ்வமைப்பால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. 'உலகளாவிய தெற்கு' என்று அழைக்கப்படும் பல நாடுகளில், பொதுவாக பலவீனமான நலவாழ்வு அமைப்புகள் காரணமாக, குழந்தைகளின் ஆரோக்கியம் தொடர்ந்து அச்சுறுத்தப்பட்டு வருகிறது என்றும், Star Singers 2022ன் பிரச்சார அமைப்பின் படி குறிப்பிடத்தக்க அளவில் தற்போதைய கருப்பொருளில் கவனம் செலுத்துகிறது என்றும், ஜெர்மனியில் உள்ள பாப்பிறை மறைப்பணி அமைப்புகளின் (PMS) தேசிய இயக்குநர் அருள்பணியாளர் Dirk Bingener அவர்கள் கூறினார்.

கிறிஸ்மஸ் தாத்தாவின் ஆடைகளை அணிந்து கொண்டு, Star Singers அமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் ஜெர்மனியில் வீடுகளுக்குச் சென்று, கிறிஸ்துமஸ் பாடல்களை இசைத்தனர் என்றும், ஜெர்மனியில் உள்ள கத்தோலிக்க திருஅவைக் குழந்தைகள், Christ Bless this House (C+M+B) என்ற ஆசீர்வாதத்தை குடும்பங்களுக்கு எடுத்துச் சென்று, உலகம் முழுவதும் துன்பப்படும் தங்கள் வயதுடைய மற்ற குழந்தைகளுக்காக நன்கொடைகளைச் சேகரித்து வருகின்றனர் என்றும் Star Singers அமைப்பு தெரிவிக்கிறது.

கோவிட்-19 பெருந்தொற்று தொடர்வதன் காரணமாக, இக்கட்டான சூழ்நிலையிலும் கூட, அதன் குழுக்கள் அனைத்துப் பங்குகளுக்கும் பாதுகாப்பாக பிரச்சாரத்தை மேற்கொள்ள வசதியாக, Star Singers பிரச்சாரம் 2022 பிப்ரவரி 2 வரை நீட்டிக்கப்படும் என்றும் இவ்வமைப்புத் தெரிவிக்கிறது.

– (Fides)

■■■■

## Ravanusa விபத்தில் பலியானவர்களுக்கு திருத்தந்தை செபம்

டிசம்பர் 11 இச்சனிக்கிழமையன்று காலையில், இத்தாலியின் சிசிலித் தீவிலுள்ள Ravanusa நகரில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றிற்கு எரிவாயு கொண்டு செல்லும் குழாய் திடீரென வெடித்ததில், பல்வேறு கட்டடங்கள் இடிந்து சேதமடைந்துள்ளன. ஏராளமானோர் இடிபாடுகளில் சிக்கி இருக்கக் கூடுமென்று அஞ்சப்படுகிறது. இதுவரை ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், இந்த விபத்தால் அருகில் உள்ள மற்ற கட்டடங்களும், சாலையில் நிறுத்தப்பட்டிருந்த கார் உள்ளிட்ட வாகனங்களும், சேதமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அவ்விபத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இந்த விபத்தில் இறந்தவர்களின் ஆன்மா இறைவனில் நிறையமைதி அடையவும், அதில் காயமடைந்தவர்கள் விரைவில் குணம்பெறவும் தான் இறைவேண்டல் செய்வதாகவும், அவ்விபத்தில் இறந்தவர்களின் உறவினர்களுக்கும், Ravanusa சமுதாயத்திற்கும் தனது ஒருமைப்பாட்டைத் தெரிவிப்பதாகவும் திருத்தந்தை கூறியுள்ளார்.

திருத்தந்தையின் பெயரில், திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள், Agrigento Nguhau; ALESSANDRO DAMIANO அவர்களுக்கு அனுப்பியுள்ள அனுதாபத் தந்திச்செய்தியில், மீட்புப் பணியாற்றுவோரையும், அவ்விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கென்று, Agrigento உயர் மறைமாவட்டம் நிதி திரட்டும் நடவடிக்கையையும் திருத்தந்தை ஊக்கப்படுத்தியுள்ளார் என்று கூறப்பட்டுள்ளது. ■■■■

மியான்மாரில் கடந்த பத்து மாதங்களுக்கு மேலாக இடம்பெற்றுவரும் வன்முறை, உலகினரின் உணர்வுகளைப் புண்படுத்தியுள்ளவேளை, வெறுப்பு, மற்றும் மனக்கசப்பின் தீமையை ஏற்காமல், இயேசுவோடு சேர்ந்து, அமைதி நிலவட்டும் என நாம் கூற விரும்புகிறோம் என்று, அந்நாட்டு கர்தினால் சார்லஸ் மாங் போ அவர்கள் கூறியுள்ளார்.

⚜

அணு குண்டு, வேதிய மற்றும் உயிரியல் ஆயுதங்கள் போன்ற பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களைத் தடைசெய்தல் மற்றும், கட்டுப்படுத்துதல் குறித்து நடைபெற்ற 6வது மறுபரிசீலனை கருத்தரங்கில் திருப்பீடப் பிரதிநிதிக் குழுவுக்கு தலைமையேற்று பங்குபெற்ற பேருரள்திரு John D. Putzer அவர்கள், பேரழிவை ஏற்படுத்தும் இந்த ஆயுதங்கள் அப்பாவி மக்கள் மீது பாரபட்சமின்றி கடும் அழிவுகளை உண்டுபண்ணுகிறது என்றும், இக்காலத்தில் இடம்பெறும் ஒவ்வொரு போரும் முன்பிருந்ததைவிட மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது என, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளதையும் தமது உரையில் குறிப்பிட்டார்.



**வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை வழங்குபவர் :** திரு. M.M. ஜெஸ்லிராஜ்,
M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அன்ட் பேணிச்சர்ஸ்,142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி,
மட்டக்களப்பு. தொ.எண்: 0779780151, 0775019977

# வினாவிடைப் போட்டி இல. - 35

1) உலக ஆயர்கள் மாமன்றத்திற்காக வடிவமைக்கப்பட்ட இலச்சினையில் மரத்தின் கீழ் காணப்படும் உருவங்கள் யாரை சித்தரிக்கின்றன? ..................................................

2) கிறிஸ்தவர்களின் கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படையான மறைபொருள் என்ன என்பதை புனித பவுலடியார் வலியுறுத்தியுள்ளார்? ..................................................

3) ஆரம்பகால அன்பிய வளர்ச்சியில் பிரேசில் நாட்டில் முதல் பங்காளர்களாக யார் அங்கம் வகித்தனர்? ..................................................

4) "மாமன்றம்" (செனெட்) என்ற சொல்லுக்கு பொருள் என்ன? ..................................................

5) உலக ஆயர்கள் மாமன்ற இலச்சினையில் மரத்தின் மேல் காணப்படும் அசைந்தாடும் கிளைகள் எதனைக் குறிக்கின்றன? ..................................................

6) "மரியாவின் விண்ணேற்பு பெருவிழா" திருச்சபையின் நம்பிக்கை அறிக்கையாக எப்போது பிரகடனப்படுத்தப்பட்டது ? ..................................................

7) தென் ஆபிரிக்காவில் கறுப்பின மக்களின் விடுதலைக்காக போராடி வரலாற்றில் இடம் பிடித்த தலைவர் யார்? ..................................................

8) மாற்கு நற்செய்தி 10:51 நமக்கு உணர்த்தும் சிந்தனை என்ன? ..................................................

9) "கடவுளை ஏமாற்ற நினைப்பவன் முன்பே தன்னை ஏமாற்றிக்கொண்டு விட்டான்" எனக் குறிப்பிட்டவர்: ..................................................

10) ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீட அவை நவம்பர் 19ம் திகதி என்ன தலைப்பின் கீழ் கருத்தரங்கு நடத்தியது? ..................................................

பெயர் : ..................................................

முகவரி : ..................................................

..................................................

பங்கு / தொ.பே.இல : ..................................................

அனுப்ப வேண்டிய தபாலகம் : ..................................................

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி - 35**
**"தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

முடிவுத் திகதி : 31.01.2022




**சரியான விடைகளை : விடுதலைப்பயணம் 2-30 ஆகிய அதிகாரங்களில் இருந்து தெரிந்து எழுதவும்**

1. "நீரிலிருந்து நான் இவனை எடுத்தேன்" எனக் கூறி பார்வோனின் மகள் அக்குழந்தைக்கு என்ன பெயரிட்டாள்?

   ..........................................................................................................

2. மோசேயின் கையிலிருந்த கோல் எதுவாக மாறியது? ..............................................
3. எபிரேயத்தில் செங்கடல் என்பதன் பொருள்: .............................................................
4. ஆண்டவர் எகிப்தியருக்கு அனுப்பிய பெருந்துன்பங்களில் 6வது துன்பம் எது?

   ..........................................................................................................

5. எகிப்திலிருந்து மக்கள் வெளியேறிய மாதம்:

   ..........................................................................................................

6. கசப்பு நீர் இருந்த இடத்திற்கு எப்பெயர் வழங்கப்பட்டது?

   ..........................................................................................................

7. மோசே கட்டிய பலிப்பீடம் எப்பெயரால் அழைக்கப்பட்டது?

   ..........................................................................................................

8. ஆண்டவர் கூறிய முப்பெரும் விழாக்கள் எவை? ............................................................

   ..........................................................................................................

9. ஆண்டவர் எலியாவை எங்கே ஓடிப்போய் ஒளிந்து கொள்ளும்படிக் கூறினார்?

   ..........................................................................................................

10. ஆண்டவருக்கு குருத்துவப் பலி புரிவதற்காக அழைக்கப்பட்டவர் யார்?

    ..........................................................................................................

**பெயர் :** ..............................................................

**முகவரி :** ..........................................................

..........................................................

..........................................................

**பங்கு / தொ.பே.இல :** ....................................

**அனுப்ப வேண்டிய தபாலகம் :** ............................

..........................................................................

<u>அனுப்பவேண்டிய முகவரி :</u>

**திருவிவிலியம் கற்போம் - 213**
**'தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

**(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)**




# போட்டி முடிவுகள்!



**திருவிவிலியம் கற்போம் – 211 விடைகள்**

1. யூதா
2. நூற்றுப்பத்து (110)
3. பென்மியனைச் சார்ந்த கேராவின் மகன் ஏகூதை
4. கூடாரமுனை ஒன்றை நெற்றிப் பொட்டில் முனை தரையில் இறங்கும் வரை அடிக்க அவன் மடிந்தான்.
5. ஆண்டவர் பார்வையில் தீயதெனப்பட்டதை செய்ததினால்
6. சிலைத்தூண் "கருவாலி" மரத்தடியில்
7. தாடை எலும்பின் மலை
8. "என் உயிர் பெலிஸ்தியருடன் மடியட்டும்" என்று சொல்லி முழு வலிமையுடன் சாய்ந்தார்.
9. 5ம் நாள் புறப்பட்டார்
10. புறமுதுகிட்டு

**பரிசுகள் – அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**போட்டியில் சரியான விடைகளை எழுதி ரூபா 400/= பரிசு பெறுவோர்:**

**போட்டியில் பங்குபற்றியோர் – 09**

* D. **விகாஷ்,**
45C, வில்லியம் வீதி,
மணல்சேனை - 01,
கல்முனை.

* **பே. ஸேஷாஸ்ரீ,**
54/17, 7ம் குறுக்கு,
இருதயபுரம் மேற்கு,
மட்டக்களப்பு.

* ர. **நிரோஷினி,**
பாதுவாபுரி,
பொத்துவில்.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 163 முடிவுகள்**

**1ம் பரிசு - 400/=**

* R. **டினுஜிதா,**
புனித அந்தோனியார் ஆலய வீதி,
பொத்துவில்.

**2ம் பரிசு - 300/=**

* **ஹெட்லின் அவுஸ்கோன்,**
இல. 28, பயனியர் வீதி,
மட்டக்களப்பு.

**3ம் பரிசு - 200/=**

* த. **ஜேருஷா,**
எல்லை வீதி, தேற்றாத்தீவு - 01.

பங்குபற்றியோர் – 15

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. **(ஆ - ர்)**




# முடி திருத்தகத்தில் ஒரு நூலகம்!

தன் கடைக்கு வருபவர்களிடம் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் விதமாக, கடைக்குள் சிறிய நூலகத்தை அமைத்துள்ளார் இந்தியாவைச் சேர்ந்த முடி திருத்தகம் நடத்திவரும் பொன் மாரியப்பன். அவர்கள். அதை முடிதிருத்தும் கடை என்பதைவிட மூளையை புதுப்பிக்கும் கடை என்று தாராளமாகச் சொல்லலாம். இங்கு வருபவர்கள் ஏதாவது ஒரு புத்தகத்தை எடுத்து பத்து பக்கங்களுக்கு மேல் வாசித்தால் அவருக்கு ரூபாய் 30 தள்ளுபடி தந்து, அசத்துகிறார் இவர்.

வழக்கமான முடி திருத்தகங்களில் காணப்படும் அரைகுறை ஆடைகளுடன் கூடிய நட்சத்திரப் படங்கள் எதுவும் இந்தக் கடையில் இல்லை. மாறாக, மர அலுமாரியில், புத்தகங்கள் வரிசையாக அடுக்கி வைக்கப் பட்டிருக்க முடிதிருத்த வந்தோர் அமைதியாக அந்தப் புத்தகங்களை எடுத்து வாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பொன் மாரியப்பன் கடைக்கு நாளிதழ்கள், வார இதழ்கள் என்பன வருகின்றன. அத்தோடு கதை, சிறுகதை, கவிதை, வரலாறு, இலக்கியம், ஆன்மிகம், நாவல் என சுமார் 1500க்கும் மேற்பட்ட புத்தகங்கள் மர அலமாரியில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

முடிவெட்டுவதற்காகக் காத்திருக்கும் நேரத்தில், புத்தகங்களை ஆர்வத்துடன் எடுத்துப் படிக்கிறார்கள் வாடிக்கையாளர்கள். பேச்சு, திரைப்படப் பாடல்கள் என எந்த சப்தமுமின்றி, முடிவெட்டும் கத்தரிக்கோல் சப்தம் மட்டுமே இங்கே கேட்கிறது.

சின்ன வயதிலிருந்தே புத்தகங்கள் வாசிக்கும் ஆர்வம் மாரியப்பனுக்கு உண்டு. 8–ஆம் வகுப்பு வரைக்கும்தான் படித்திருக்கிறார்.

சில ஆண்டுகள் ஒரு வக்கீலிடம் சிப்பந்தியாக வேலைகளைச் செய்து கொண்டிருந்தார். அதன் பிறகு, அப்பா செய்துவந்த இந்த முடி திருத்தும் தொழிலைத் தொடர கடை ஆரம்பித்தார்.

முடிவெட்ட ஆள் வராத நேரத்தில் புத்தகம் வாசிக்கத் தொடங்கி இருக்கிறார். இப்படி, முழுமையாகப் படித்து முடித்த புத்தகங்களை அலமாரியில் அடுக்கி வைக்கத் துவங்கியிருக்கிறார். அது இன்று 2500க்கும் மேற்பட்ட ஒரு நூலகமாக உருவெடுத்திருக்கிறது.

இந்தக் கடையைத் துவங்கி ஏழு ஆண்டுகள் ஆகிறது.

"புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை ஊக்கப் படுத்தணும், குறைந்த பட்சம் முடிவெட்ட வந்திருக்கும் நேரத்துலயாவது புத்தகங்களைப் படிக்க வைக்கணும்னு நினைச்சேன். தனியா புத்தக அலமாரி ஒண்ணு வாங்கி, அதுல என் கைவசம் இருந்த புத்தகங்கள் அனைத்தையும் வரிசையா அடுக்கிவெச்சேன். முடிவெட்ட காத்திருப்பவர்களிடம், பிடிச்ச புத்தகத்தை எடுத்துப் படிக்கச் சொன்னேன். முதலில் தயக்கம் காட்டியவர்கள், பிறகு எடுத்து மேலோட்டமாகப் புரட்ட ஆரம்பிச்சாங்க. தொடர்ந்து படிக்க ஆரம்பிச்சாங்க. செல்பேசியில் மூழ்கிக் கிடக்கக்கூடாது, அடிக்கடி செல்பேசி பார்ப்பதால் ஏற்படும் தீமைகள் குறித்து நாளிதழ்களில் வெளியான தகவல்கள், கட்டுரைகளையும் அனைவரின் பார்வையில் படுறமாதிரி ஒட்டி வச்சிருக்கேன்" என்கிறார் பொன் மாரியப்பன். "இப்போது கடைக்கு முடிவெட்ட வருகிறவர்கள் யாரும் செல்பேசிப் பார்ப்பதில்லை. முடிவெட்டிய பிறகும் சில நிமிடங்கள் உட்கார்ந்து புத்தகத்தைப் படித்துவிட்டு, பொறுமையாக வீட்டுக்குப் போகிறவர்களும் நிறைய உண்டு".

வாசிப்புப் பழக்கம் அருகிப் போகின்ற காலத்தில் இவருடைய செயல் நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது.

■■■■ முகநூல் பக்கத்திலிருந்து .....

## சீலோம் வைத்தியசாலை முத்து விழா நிகழ்வுகள்









## கிறிஸ்து பிறப்புவிழா திருப்பலி – மரியாள் பேராலயம்





## மட்டக்களப்பு திருமலை வீதியில், இயேசுசபைத் துறவியான அருட்தந்தை இயூஜின் ஜோன் ஹேபர்ட் அடிகளாரின் சிலை திறந்து வைப்பு



